# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
# விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்
# (07.11.2016 முதல் திருத்தியமைக்கப்பட்டது)

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION
# "INSTRUCTIONS TO APPLICANTS"
# (Revised w.e.f 07.11.2016)

## 1. NOTIFICATION OF VACANCIES:-

The Tamil Nadu Public Service Commission notifies vacancies for various posts in the Commission's Website and Newspapers. The number of such vacancies notified by the Commission is only approximate and is liable for modification with reference to vacancy position at any time before or at the time of actual recruitment.

## 1. காலிப்பணியிடங்கள் அறிவிப்பு:-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், அரசுப்பணிகளிலடங்கிய பல்வேறு பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கைகளை தேர்வாணைய இணையதளத்திலும், செய்தித்தாள்களிலும் வெளியிடுகிறது. அவ்வாறு வெளியிடப்படும் காலிப்பணியிடங்களுக்கான எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவுப்பணிகள் இறுதியாக்கப்படும் வரை அவை எந்த நேரத்திலும் மாறுதலுக்குட்பட்டதாகும்.

## 2. HOW TO APPLY THROUGH ONLINE

## இணையவழியில் விண்ணப்பிப்பது எப்படி

1. Applicants should apply only through online mode in the Commission's Websites www.tnpsc.gov.in/www.tnpscexams.net/ www.tnpscexams.in.

விண்ணப்பதாரர்கள் www.tnpsc.gov.in / www.tnpscexams.net/ www.tnpscexams.in. ஆகிய தேர்வாணையத்தின் இணையதளங்கள் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

2. One Time Registration (OTR) and applicant Dashboard are mandatory before applying for any post. One Time Registration is valid for 5 years from the date of registration.

எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்கும் முன்பு ஒருமுறைப்பதிவு எனப்படும் நிரந்தரப்பதிவு மற்றும் தன்விவரப்பக்கம்(Dashboard) ஆகியன கட்டாயம் ஆகும். ஒருமுறைப்பதிவு, பதிவு செய்த நாள் முதல் ஐந்து ஆண்டுகள் நடைமுறையிலிருக்கும்.

3. For applying in One Time Registration, the applicants should have scanned image of their photograph and signature in CD/DVD/Pen drive to upload the photo and signature.

ஒருமுறைப்பதிவில் பதிவேற்றம் செய்ய, விண்ணப்பதாரர்கள் தங்களது புகைப்படம், கையொப்பம் ஆகியவற்றை CD/DVD/Pen drive போன்ற ஏதேனும் ஒன்றில் பதிவு செய்து தயாராக வைத்திருக்க வேண்டும்.

4. Applicants who have already registered in One Time Registration on or before 29.09.2015 shall use their existing user ID and Password to create applicant Dashboard in the **new** One Time Registration system. No applicant is permitted to create more than one registration ID in one time registration.

29.09.2015 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஒருமுறைப்பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள், ஏற்கனவே அவர்கள் பெற்றுள்ள பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றைப் பயன்படுத்தி புதிய ஒருமுறைப்பதிவு முறையில் தங்களின் தன் விவரப் பக்கத்தினை ஏற்படுத்த வேண்டும். ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஒருமுறைப் பதிவுக் கணக்கை (One Time Registration ID) உருவாக்க அனுமதியில்லை.

5. One Time Registration is not an application for any post. It is just collection of information from the applicants and giving a separate dashboard to each applicant to facilitate them to maintain their own profile. Applicant who wishes to apply for any post shall click **"Apply"** against the post Notified in the Commission's Website and use the same USER ID and PASSWORD given for ONE TIME REGISTRATION. USER ID and PASSWORD are created by the applicants themselves. Incase, if the applicant forgets the USER ID and PASSWORD, he can change or reset them using **"FORGOT PASSWORD AND FORGOT LOGIN ID, OTR ID"** Options. The Commission will not furnish USER ID and PASSWORD details to the applicants.

ஒருமுறைப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பம் அல்ல. இது விண்ணப்பதாரர்களின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கு தன்விவரப் பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், தேர்வாணைய இணையதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ள அப்பதவிக்குரிய அறிவிக்கையில் **"Apply"** என்ற உள்ளீடு வழியே நிரந்தரப்பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தாங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர் ஏற்கனவே ஏற்படுத்திய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்களை மறந்துவிட்டால் அவற்றை **"FORGOT PASSWORD, FORGOT LOGIN ID, OTR ID"**ஆகிய விருப்பத் தெரிவு மூலம் மீண்டும் உருவாக்கலாம் / மாற்றிக் கொள்ளலாம். விண்ணப்பதாரர்களுக்கு பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகிய விவரங்கள் தேர்வாணையத்தால் வழங்கப்படமாட்டாது.

6. Applicants have to furnish their correct SSLC Register Number, Month and Year of Passing and Name of the Board which issued the certificate, while registering online. If any detail furnished is found to be wrong, both One Time Registration and Online Application will be rejected at any stage.

விண்ணப்பதாரர்கள் இணைய வழியில் விண்ணப்பிக்கும் பொழுது பள்ளி இறுதிச்சான்றின் பதிவு எண், தேர்ச்சிபெற்ற வருடம் மற்றும் மாதம், சான்றிதழ் வழங்கிய குழுமம் ஆகிய தகவல்களை அதற்கான கட்டங்களில் சரியாகப் பதிவு செய்ய வேண்டும். மேற்படி விவரங்கள் தவறாக பதிவு செய்திருப்பின் ஒருமுறைப் பதிவும், தேர்வுக்கான விண்ணப்பமும் எந்தவொரு நிலையிலும் நிராகரிக்கப்படும்.

7. Applicants who have more than one SSLC mark sheets, should enter the details available in the mark sheet issued on final attempt in which he had passed the SSLC Examination.

பள்ளி இறுதி தேர்ச்சிக்கு (S.S.L.C) ஒன்றுக்கு மேற்பட்ட மதிப்பெண் சான்றிதழ் வைத்திருக்கும் விண்ணப்பதாரர்கள், தாங்கள் இறுதியாகத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற சான்றிதழில் உள்ள விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

8. A valid e-mail ID and Mobile Number is mandatory for one time registration. E-mail ID and Mobile Number are to be kept in active mode. TNPSC will send all communications and messages only to the registered email ID and Mobile.

ஒருமுறைப்பதிவு (OTR) செய்வதற்கு பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவை கட்டாயமாகும். மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண் ஆகியவற்றை தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும். தேர்வு தொடர்பான செய்திகள் அனைத்தும் விண்ணப்பதாரர் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசிக்கு மட்டுமே அனுப்பப்படும்.

9. Though the applicants furnish details / information in the One Time Registration, the details furnished in the application for the recruitment concerned alone will be taken into consideration for that recruitment.

விண்ணப்பதாரர்கள் ஒருமுறைப்பதிவில் தங்களது விவரங்களைப் பதிவு செய்திருந்தபோதிலும், அவர்கள் குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பிக்கும் பொழுது அந்தத் தேர்வுக்கான விண்ணப்பத்தில் பதிவு செய்த விவரங்கள் மட்டுமே அவர்கள் தரும் விவரங்களாக எடுத்துக்கொள்ளப்படும்.

10. Please note that all the particulars mentioned in the online application including Nam of the applicant, Post Applied for, Communal Category, Date of birth, Address, e-mail ID, Centre of Examination etc. will be considered as final. However, applicants can modify certain fields till the last date specified for applying online. Certain fields are fixed and cannot be edited even before the closing date. Applicants are hence requested to fill in the online application form with utmost care as no correspondence regarding change of details will be entertained after last date for applying.

இணையவழியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில், விண்ணப்பதாரர்கள் தரும் பெயர், விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், சாதிப்பிரிவு, பிறந்த தேதி, முகவரி, மின்னஞ்சல் முகவரி, தேர்வு மையம் போன்ற விவரங்கள் இறுதியானவையாகக் கருதப்படும். விண்ணப்பத்தில் அளித்த சில விவரங்களை அத்தேர்வுக்கு விண்ணப்பிக்க கொடுத்துள்ள இறுதிநாள் வரை தேவைப்பட்டால் திருத்திக்கொள்ளலாம். எனினும், சில விவரங்கள் திருத்த இயலாது. எனவே விண்ணப்பதாரர்கள்

தங்களது விவரங்களை உள்ளீடு செய்யும் பொழுது மிகுந்த கவனத்துடன் உள்ளீடு செய்து விண்ணப்பத்தை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இறுதிநாளுக்குப் பின்னர் ஒருமுறைப்பதிவு அல்லது இணையவழி விண்ணப்பம் ஆகியவற்றில் திருத்தம்கோரி தேர்வாணையத்தில் பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது.

11. The Instructions and Illustration regarding One time Registration are available in the website www.tnpscexams.net / www.tnpscexams.in.

ஒருமுறைப்பதிவு குறித்த அறிவுரைகள் மற்றும் விளக்கங்கள் www.tnpscexams.net/ www.tnpscexams.in ஆகிய இணையதளங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

12. An applicant already having user ID and Password, has to login. The available OTR particulars will be displayed on the screen. They have to fill up additional details required for specific recruitment application.

பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் பெற்றிருக்கும் விண்ணப்பதாரர்கள் அதனைப் பயன்படுத்தி உள்நுழைந்தவுடன் ஒருமுறைப்பதிவில் ஏற்கனவே பதிவுசெய்துள்ள விவரங்கள் திரையில் தெரிய வரும். தேர்வாணையத்தால் அவ்வப்போது வெளியிடப்படும் ஒவ்வொரு தேர்வுக்கும் விண்ணப்பிக்கும் போது அதற்குரிய கூடுதலாக தேவைப்படும் விவரங்களையும் பதிய வேண்டும்.

13. After submitting the details in the application, applicants can choose any one of the following modes for making payment of examination fee.

- a. Net Banking
- b. Debit Card / Credit Card
- c. Remittance through Bank Chalan
- d. Remittance through Post Office Chalan

விண்ணப்பத்தில் உரிய விவரங்களைப் பதிவு செய்து சமர்ப்பித்தவுடன் விண்ணப்பதாரர்கள் தங்களது தேர்வுக்கட்டணங்களைச் செலுத்த கீழ்க்காணும் ஏதேனும் ஒரு முறையினைத் தேர்வு செய்யலாம்

- அ. இணையவழி செலுத்தும் முறை
- ஆ. பற்று அட்டை / கடன் அட்டை முறை
- இ. வங்கி செலுத்துச் சீட்டு முறை
- ஈ. அஞ்சலக செலுத்துச் சீட்டு முறை

**ONLINE FEE PAYMENT MODE:**

14. An applicant who wishes to have immediate fee reconciliation, shall make payment through net banking or Debit Card / Credit Card.

**இணையவழியில் கட்டணம் செலுத்தும் முறை:**

விண்ணப்பதாரர் தான் செலுத்திய விண்ணப்பக் கட்டணம் உடனடியாக மறு ஒத்திசைவு செய்யப்பட வேண்டுமாயின் இணையவழி வங்கி சேவை அல்லது பற்று அட்டை / கடன் அட்டை மூலமாக கட்டணங்களைச் செலுத்தலாம்.

15. Payment made through chalan would take atleast two working days for reconciliation.

செலுத்துச்சீட்டு மூலம் செலுத்தப்படும் கட்டணங்கள் ஒத்திசைவு பெற குறைந்தபட்சம் இரண்டு வேலை நாட்கள் ஆகும்.

16. In case, an applicant chooses to pay fees through the online mode, an additional page of the application form will be displayed wherein applicants may follow the instructions and fill in the requisite details to make payment. There is a possibility for online payment failure. Hence, if the online payment fails, applicant can re-try to pay the fee again either by on-line mode or chalan mode. In case of online payment failure, the amount Debited from the applicant's account will be reverted to his account automatically.

விண்ணப்பதாரர் இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையை தெரிவுசெய்தால், விண்ணப்பத்தில் அதற்குரிய கூடுதல் பக்கம் திரையில் தெரிய வரும். அந்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைக் கவனமாகப் பின்பற்றி தேவையான விவரங்களை பதிவு செய்து கட்டணம் செலுத்த வேண்டும். இணைய வழிக்கட்டணம் செலுத்தும் முறையில் பணப்பரிமாற்றம் தடைபடும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. இணைய வழிக்கட்டணம் செலுத்தும் முறையில் தடை ஏற்படும் நிலையில் விண்ணப்பதாரர் மீண்டும் இணைய வழி கட்டணம் செலுத்தும் முறையினையோ அல்லது வங்கி / அஞ்சலக செலுத்துச் சீட்டு முறையினையோ தேர்ந்தெடுத்து பணம் செலுத்த வேண்டும். இணைய வழிக்கட்டணம் செலுத்தும் முறையில் தடை ஏற்பட்டால் விண்ணப்பதாரர் கணக்கில் பிடித்தம் செய்யப்படும் தொகை விண்ணப்பதாரர் கணக்கிலேயே திருப்பி சேர்க்கப்படும்.

17. After submitting the payment information in the online application form, wait for the intimation from the server. Meanwhile DO NOT press "**Back"** or "**Refresh"** button to avoid payment failure or double Payment.

விண்ணப்பிக்கும் போது, கட்டண விவரங்களைப் பதிவு செய்த பின்னர், அதற்கான தகவல் திரையில் வரும்வரை காத்திருக்கவும். இடையில் "**Back"** அல்லது "**Refresh"** செய்யாமல் காத்திருக்க வேண்டும், இல்லையெனில் பணப்பரிமாற்றம் தடைபடும். இரண்டாம் முறையாகப் பணம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்காக இடையில் காத்திருக்க வேண்டும்.

18. If the online transaction has been successfully completed an Application Number will be generated. Applicants should note the Application Number for future reference in respect of the recruitment applied for.

இணையவழியில் விண்ணப்பம் அனுப்பும் முறை நிறைவு பெற்றவுடன், அந்த விண்ணப்பத்திற்கான எண் திரையில் தோன்றும். அதனை விண்ணப்பதாரர்கள் அந்தத் தேர்வின் எதிர்காலத் தேவைக்காக குறித்துவைத்துக் கொள்ள வேண்டும்.

**OFFLINE FEE PAYMENT MODE:-**

19. For offline mode of payment (Through Bank or Post Office Chalan) applicants have to select either Post Office or State Bank of India or Indian Bank.

**<u>வங்கி /அஞ்சலகத்தில் கட்டணம் செலுத்தும் முறை:</u>**

இணையவழியிலன்றி, கட்டணம் செலுத்தும் முறையைத் தேர்ந்தெடுக்கும் விண்ணப்பதாரர்கள், அஞ்சலகத்தினையோ அல்லது பாரத ஸ்டேட் வங்கியினையோ அல்லது இந்தியன் வங்கியினையோ தேர்வு செய்ய வேண்டும்.

20. On Submission, system will generate the payment chalan which the applicant needs to take print out and go to the nearest branch of State Bank of India or Post Office or Indian Bank to make the payment within two days.

வங்கி/அஞ்சலகத்தைத் தேர்ந்தெடுத்தவுடன் கணினி உருவாக்கும் செலுத்துச்சீட்டினை அச்சிட்டு, இரண்டு நாட்களுக்குள், அருகிலுள்ள இந்தியன் வங்கியிலோ அல்லது பாரத ஸ்டேட் வங்கியிலோ அல்லது அஞ்சலகத்திலோ கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

21. Tamil Nadu Public Service Commission reserves the right to change the mode of payment at any time.

கட்டணம் செலுத்தும் முறையை எந்நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு.

22. Applicant has to collect copy of the Fee Payment Chalan from the Branch concerned. The applicant has to verify the particulars that the chalan is properly signed and the details of Transaction Number, Branch Name and DP Code Number, Deposit Date have been noted in the chalan by the Bank or PostOffice.

வங்கியிலோ அல்லது அஞ்சலகத்திலோ கட்டணத்தைச் செலுத்திய பின்னர் விண்ணப்பதாரருக்குரித்தான செலுத்துச்சீட்டின் நகலினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். செலுத்துச்சீட்டில் பணம் பெறுபவரின் சரியான கையொப்பம், பணப்பரிமாற்ற எண், கிளையின் பெயர், வங்கிக்கான குறியீட்டு எண், பணம் செலுத்திய தேதி போன்ற விவரங்கள் சரியாக உள்ளனவா என்று சரி பார்த்துக்கொள்ள வேண்டும்.

23. Online Application Registration will be considered as completed, only if the payment is made either in post office or in State Bank of India or in Indian Bank within two days from the date of registration.

விண்ணப்பத்தை பதிவு செய்த இரண்டு நாட்களுக்குள் அஞ்சலகத்திலோ அல்லது வங்கியிலோ கட்டணத்தைச் செலுத்தினால் மட்டுமே இணையவழி விண்ணப்பம் முறையாக பதிவேற்றப்பட்டதாகக் கருதப்படும்

24. Applicants need not send the printout of the online application or any other supporting documents to the Commission, unless asked for specifically.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தின் நகலினையோ அல்லது தொடர்புடைய சான்றிதழ்களையோ தேர்வாணையத்திற்கு அனுப்பத்தேவையில்லை. அவற்றை, தேர்வாணையம் கோரும் நேரத்தில் அனுப்பினால் மட்டும் போதுமானது.

**Note: / குறிப்பு:**

I.Applicants are advised in their own interest to apply on-line much before the closing date and not to wait till the last date for depositing the fee to avoid the possibility of disconnection/inability/failure to log on to the TNPSC's website on account of heavy load on internet/website.

விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்க குறிப்பிட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில்நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.

II.TNPSC does not assume any responsibility for the applicants not being able to submit their applications within the last date on account of the aforesaid reasons or for any other reason beyond the control of TNPSC.

மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால், விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசி கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

III. Every applicant should have his own e-mail ID and Password. No applicant should share his e-mail ID, Password, Mobile Number with anyother person. In case an applicant does not have a valid personal e-mail ID, he should create a new e-mail ID before applying on-line and must maintain that email account live.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனக்கான தனி மின்னஞ்சல் முகவரியையும், கடவுச்சொல்லையும் உருவாக்கி வைத்திருக்க வேண்டும். அவற்றை எந்தச் சூழ்நிலையிலும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது. விண்ணப்பதாரர்கள் தங்களுக்கான மின்னஞ்சல் முகவரி ஏதுமில்லை எனில் அவர்கள் விண்ணப்பிக்கும் முன்னர், புதிதாக ஒரு மின்னஞ்சல் முகவரியை உருவாக்கி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். மின்னஞ்சல் முகவரியைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

IV. Applicants should carefully fill in the details in the On-Line Application at the appropriate places and click on the "SUBMIT" button at the end of the On-Line Application format. Before pressing the "SUBMIT" button, applicants are advised to verify every particular field in the application. The name of the applicant or name of his /her father/husband etc., should be spelt correctly in the application as it appears in the certificates/mark sheets. Any change/alteration found may lead to disqualification of the candidature.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் அளிக்க வேண்டிய விவரங்களை மிகுந்த கவனத்துடன் உள்ளீடு செய்து விண்ணப்பத்தினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சமர்ப்பிக்கும் முன்னர் தாங்கள் அளித்த விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளனவா என சரிபார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்களின் பெயர் அவர்களது பெற்றோர் / கணவரின் பெயர் ஆகியவற்றை சான்றிதழ்களில் உள்ளபடி மிகச்சரியாக பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேற்படி விவரங்களில் மாற்றம் காணப்படின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

V. There is a provision to modify the submitted Online Application. Applicants are requested to make use of this facility to correct their details in the Online Application, if any. This modification facility will be available up to the last date for applying online for the particular post. After this last date, no modification will be permitted. Applicants should take utmost care while filling in the Online Application. Certain fields are fixed and cannot be edited. Applicants are hence requested to fill in the online application form with utmost care as no correspondence regarding change of details will be entertained. TNPSC will not be responsible for any consequences arising out of furnishing of incorrect and incomplete details in the application or omission to provide the required details in the application form.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்திலுள்ள விவரங்களை தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் வரை மாற்றிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடைசி நாளுக்குப் பிறகு அவர்கள் விண்ணப்பத்தில் எந்தவொரு மாறுதலையும் செய்ய இயலாது. சில விவரங்களை விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும் மாற்ற இயலாது. எனவே விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் போது மிகுந்த கவனத்துடன் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்தில் தவறாக கொடுக்கப்பட்ட விவரங்களை மாற்றிக்கொள்ள வேண்டி விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் எந்தவொரு வேண்டுகோளும் பரிசீலிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் தரும் தவறான, முழுமையற்ற விவரங்கள் அல்லது விடுபட்டுப்போன விவரங்களுக்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

VI.Commission is not responsible for online payment interruption or failure.

இணையவழி கட்டணம் செலுத்தும் முறையில் ஏற்படும் இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் தேர்வாணையம் பொறுப்பாகாது.

VII. Any clarification may be obtained from the Help Desks No.8754000961. You can also send us your queries at technicalhelp@tnpscexams.in.

தெளிவுரை வேண்டுவோர் 8754000961 என்ற எண்ணில் உள்ள உதவி மையத்தையோ அல்லது technicalhelp@tnpscexams.in என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம்.

## 3. GENERAL ELIGIBILITY CONDITIONS:

An applicant must satisfy the Commission on the following aspects:-

(a) CITIZENSHIP

that he is –

(i) a citizen of India; or

(ii) a subject of Nepal or Bhutan; or

(iii) a Tibetian refugee who came over to India before the 1st January 1962 with the intention of permanently settling in India; or

(iv) A person of Indian Origin who has migrated from Pakistan,Burma, Sri Lanka, Vietnam, East African countries of Kenya, Uganda, the United Republic of Tanzania (formerly Tankanika and Zanzibar) Zambia, Malawi, Zaire and Ethiopia with the intention of permanently settling in India.

(v) An applicant belonging to categories (iii) or (iv) or a subject of Nepal or Bhutan should also obtain a certificate of eligibility given by the Government of Tamil Nadu.

(vi) An applicant in whose case a certificate of eligibility is necessary will be admitted to an examination or interview and he will provisionally be appointed subject to the necessary certificate being given to him by the Government of Tamil Nadu.

<u>3. தகுதிக்கான பொதுவான நிபந்தனைகள்</u>:

ஒரு விண்ணப்பதாரர் கீழ்க்காணும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(அ) விண்ணப்பதாரரின் குடியுரிமை:-

(i)இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும் அல்லது

(ii)நேபாளம் அல்லது பூட்டான் அரசின் குடிமகனாக இருத்தல் வேண்டும் அல்லது

(iii)இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்கத்துடன் 1962 ஜனவரி 1 ஆம் நாளுக்கு முன்பு திபெத்திலிருந்து இந்தியாவிற்கு வந்து விட்ட அகதியாக இருத்தல் வேண்டும் அல்லது

(iv)இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டு பாகிஸ்தான், பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம், கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளான கென்யா, உகாண்டா, தான்சானியா ஐக்கியக் குடியரசு (முன்னாள் தங்கனிகா மற்றும் சான்சிபார்), ஜாம்பியா, மாலவி, சயர், எதியோப்பியா ஆகிய நாடுகள் ஏதாவதொன்றிலிருந்து இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்குடன் இடம் பெயர்ந்து வந்தவராக இருத்தல் வேண்டும்.

(v)மேற்கூறிய மூன்றாம் அல்லது நான்காம் வகையைச் சேர்ந்த விண்ணப்பதாரர் அல்லது நேபாளத்தின் அல்லது பூட்டான் அரசின் குடிமகன் ஒருவர் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழைப் பெற வேண்டும்.

(vi)தகுதிச் சான்றிதழ் பெற வேண்டிய விண்ணப்பதாரர் எழுத்துத் தேர்வுக்கு அல்லது நேர்முகத் தேர்வுக்கு (Interview) அனுமதிக்கப்பட்டு, தேவையான சான்றிதழ் தமிழ்நாடு அரசாங்கத்தால் அவருக்கு வழங்கப்படுவதற்கு உட்பட்டு, அவருக்குத் தற்காலிகமாக நியமனம் வழங்கப்படும்.

**b) CHARACTER AND ANTECEDENTS:**

That his character and antecedents are such as to qualify him for the appointment;

**(ஆ) ஒழுக்கமும், முன்வரலாறும்:**

நியமிக்கப்படுவதற்கு அவருடைய ஒழுக்கமும், முன்வரலாறும் (Antecedents) அவரைத் தகுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.

**c) BIGAMY:**

That he does not have more than one living wife or if such person is a woman, she is not married to any person who has a wife living; and

**(இ)இருதார மணம்**

ஆண் விண்ணப்பதாரர், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் உடையவராக இருத்தல் கூடாது. விண்ணப்பதாரர் பெண்ணாக இருப்பின், ஏற்கனவே மனைவியுடன் வாழும் ஒருவரைத் திருமணம் செய்தவராக இருத்தல் கூடாது.

**d) APPLICANTS IN UNION/STATE GOVERNMENT SERVICE:**

That on the date of notification for the purpose of direct recruitment he was not in the service of the Indian Union or of a State in India.

**<u>Note</u>: -**

For the purpose of this clause a person will be deemed to be not in the service of the Indian Union or of a State in India.

**i**. If a period of five years has not elapsed since his first appointment to a service of the Indian Union or of a State in India.

**ii.** If he belongs to one of the Scheduled Castes or Scheduled Castes (Arunthathiyars) or Scheduled Tribes or to one of the MBC/DC, Backward Classes and Backward Classes (Muslims)

**(ஈ) இந்திய அரசின் / மாநில அரசின் பணியிலிருக்கும் விண்ணப்பதாரர்கள்:**

நேரடி நியமனம் செய்யப்படுவதற்குத் தேர்வாணையத்தின் அறிவிக்கை / விளம்பரம் வெளியாகும் நாளன்று அவர் இந்திய அரசுப் பணியிலோ அல்லது மாநில அரசுப் பணியிலோ இருந்திருக்கக் கூடாது.

<u>குறிப்</u>பு-

இவ்விதியைப் பொறுத்தமட்டில் கீழ்க்கண்டவர்கள் இந்திய அரசு அல்லது மாநில அரசுப்பணியில் இருப்பவராகக் கருதப்பட மாட்டார்கள்.

(1)அவர் இந்திய அரசுப் பணியில் அல்லது மாநில அரசுப் பணியில் முதலில் சேர்ந்த நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடையாதிருந்தால் அல்லது

(2)அவர் ஆதிதிராவிட வகுப்பினராகவோ, ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினராகவோ, பழங்குடியினராகவோ, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்மரபினராகவோ அல்லது இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவோ மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினராகவோ இருந்தால்

**4. SOUND HEALTH ETC.,**

An applicant must satisfy the appointing authority that he is of sound mind, health, active habits and free from any bodily defect or infirmity unfitting him for the appointment.

4. திடமான உடல் நலமும் பிறவும்.,

விண்ணப்பதாரர், திடமான மனம், உடல் நலம், சுறுசுறுப்பு, நலம் பயக்கும் பழக்கவழக்கங்கள் உடையவர் என்பதும், பணிக்குத் தகுதியில்லாதவராகச் செய்யும் எந்தவொரு உடற்குறைபாடு அல்லது வலுக்குறைவு இல்லாதவர் என்பதும், பணியமர்த்தும் அலுவலர் ஏற்கும் வண்ணம் இருக்க வேண்டும்.

**5. AGE LIMIT:**

Save or otherwise stated in the Commission’s Notification / Advertisement, no person shall be eligible for appointment to any service by direct recruitment including appointment on compassionate grounds, unless he has completed 18 years of age on the first day of July of the year in which the vacancy is notified.

**The maximum age-limit prescribed in the special rules shall not apply**

(i) To the appointment of an applicant belonging to a Scheduled Caste, Scheduled Caste (Arunthathiyars), Scheduled Tribes, Backward Class ( Muslims), Backward Classes, Most Backward Classes and Denotified communities or of destitute widows of all castes to a post included in a service for which the Special Rules prescribe a qualification lower than a degree (10,+2,+3) of any University mentioned in Schedule II to part-II of Tamil Nadu State and Sub-Ordniate Services Rules, if such applicant possesses a general educational qualification which is higher than that referred to in sub-rule (a) and he is otherwise qualified for appointment;

Or

(ii) to the appointment to a post included in a service of an applicant belonging to any of the Scheduled Castes, Scheduled Tribes, Backward Classes (Muslims), Backward Classes, Most Backward Classes and Denotified communities or of destitute widows of all castes who holds a degree of any University mentioned in Schedule II to part-II of Tamil Nadu State and Sub-Ordniate Services Rules, if the degree (10,+2,+3) he holds is not lower than the degree prescribed in the Special Rules for appointment to such post and if he is otherwise qualified for appointment.

Provided that, for direct recruitment to a post included in a service for which the minimum qualification required is not higher than the minimum general educational qualification, the age limit prescribed shall be increased by five years in respect of applicants belonging to Scheduled Castes or Scheduled Castes (Arunthathiyars) or Scheduled Tribes or in respect of destitute widows of all castes, who do not possess a general educational qualification, which is higher than the minimum general educational qualification.

Provided further that for direct recruitment to a post included in a service for which the minimum qualification required is not higher than the minimum general educational qualification, the age limit prescribed shall be increased by two years in respect of applicants belonging to *Backward Class (Muslims), Backward Classes, Most Backward Classes and Denotified Communities, who do not possess a general educational qualification, which is higher than the minimum general educational qualification.

**Note:**

**i.** "A pass in Pre-University Examination or Higher Secondary Examination or Diploma awarded by the State Board of Technical Education and Training, Tamil Nadu or by any Institution or Board recognized by the Government of Tamil Nadu or any other State Government or the Government of India, shall be deemed to be a qualification higher than the minimum that has been referred to Instruction above".

**ii**.An applicant who has passed only one or two parts of the Pre-University or Higher Secondary Examination or Diploma will not be deemed to possess a qualification higher than the minimum general educational qualification.

**Note:** **"Destitute Widow"** shall mean a widow whose total monthly income from all sources shall not be more than Rs.4,000/-(Rupees Four Thousand only), including any family pension or other receipts including income from private practice in the case of professionals. Such applicants should produce a certificate from the R.D.O or the Assistant Collector or the Sub-Collector concerned in the format prescribed. Destitute Widow shall not include a divorcee or any lady deserted by her husband (DW re-married are not eligible)

## 5. வயது வரம்பு:

தேர்வாணைய அறிவிக்கை / விளம்பரத்தில் குறிப்பிடப்படாத வரையில் காலியிடம் குறித்த அறிவிக்கை வெளியிடப்படும் ஆண்டின் ஜூலை மாதம் முதல் நாளின்படி 18 வயதினை நிறைவு செய்யாதவர், கருணை அடிப்படையிலான நியமனம் உள்ளிட்ட யாதொரு பணித் தொகுதிக்கும் நேரடி நியமனம் மூலமாக நியமனம் செய்யப்படத் தகுதியற்றவராவார்.

.

**<u>சிறப்பு விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் உச்ச வயது வரம்பு கீழ்க்கண்ட இனங்களுக்கு பொருந்தாது</u>**.

(I) ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி இளநிலை பட்டப்படிப்புக்கு குறைவாக இருந்தால் அப்பதவிக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (Scheduled Caste) அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் (Scheduled Tribes) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (Most Backward Classes/Denotified Communities) அல்லது இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமியர் அல்லது அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவை ஆகியோர் குறைந்த அளவு பொது கல்வித்தகுதிக்கு மேற்பட்ட பொதுக்கல்வித்தகுதி பெற்றிருந்தால், அவருக்கு அப்பதவிக்கான சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பு விதி பொருந்தாது.

அல்லது

(ii)ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி இளநிலை பட்டப்படிப்பாக நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அப்பதவிக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (Scheduled Caste) அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் (Scheduled Tribes) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (Most Backward Classes/Denotified Communities) அல்லது இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்படுத்தப்பட்ட இசுலாமியராயிருந்து தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில் அட்டவணை 2-இல் குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழக மானியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் / கல்வி நிறுவனங்களால் அளிக்கப்படும் இளநிலைப்பட்டம் பெற்றிருந்தால் அவருக்கு சிறப்பு விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பு விதி பொருந்தாது.

மேலும், நேரடி நியமனத்திற்கு ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி குறைந்த அளவு பொதுக்கல்வித்தகுதிக்கு மேற்பட்டதாக இல்லாதிருந்தால், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (Scheduled Caste) அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் (Scheduled Tribes) அல்லது அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவை ஆகியோருக்கு அப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பிலிருந்து ஐந்து ஆண்டுகள் உயர்த்தி அளிக்கப்படும்.

மேலும், நேரடி நியமனத்திற்கு ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி குறைந்த அளவு பொதுக்கல்வித்தகுதிக்கு மேற்பட்டதாக இல்லாதிருந்தால், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர் (Most Backward Classes/Denotified Communities) அல்லது இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்படுத்தப்பட்ட இசுலாமியர் ஆகியோருக்கு அப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட உச்ச வயது வரம்பிலிருந்து இரண்டு ஆண்டுகள் உயர்த்தி அளிக்கப்படும்.

குறிப்பு-

(i)புகுமுக வகுப்புத் தேர்வு (Pre-University Examination) அல்லது மேல்நிலைக் கல்வித் தேர்வு அல்லது தமிழ்நாடு அரசின் தொழில் நுட்பக் கழகம் மற்றும் பயிற்சிக் குழுமம் அல்லது தமிழ்நாடு அரசு அல்லது பிறமாநில அரசு அல்லது இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனம் / குழுமத்தால் வழங்கப்பட்ட பட்டயப்படிப்பு சான்றிதழ் பெற்றவர்கள் குறைந்தபட்ச கல்வித்தகுதியைக் காட்டிலும் கூடுதலான கல்வித்தகுதியைப் பெற்றவர்களாகக் கருதப்படுவர்.

(ii) பல்கலைக் கழகத்தில் புகுமுகத் தேர்வில் (Pre-University Examination) அல்லது மேல்நிலைப்பள்ளித் தேர்வில் அல்லது பட்டயப்படிப்பில் இரண்டு பகுதிகளில் அல்லது ஒரு பகுதியில் மட்டும் தேறியுள்ள விண்ணப்பதாரர், குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட கல்வித் தகுதி பெற்றிருப்பதாகக் கருதப்படமாட்டார்.

குறிப்பு- "ஆதரவற்ற விதவை" என்பது விதவை ஒருவர் அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ. 4,000/-க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது மாவட்ட உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்படமாட்டார். (மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாக கருதப்படமாட்டார்)

## 6. OTHER CONDITIONS:

**i.** Selection of an applicant by the Commission carries with it no guarantee for an appointment in a government department.

**ii.** The Number of vacancies advertised is only approximate and is liable for modification with reference to vacancy position as follows:-“In the case of selections based on Written cum Oral Test, the vacancies are liable for modification before admitting the applicants to oral test. In the case of selections based only on written test, the vacancies are liable for modification before actual recruitment or finalisation of results. Provided that, modification in the vacancy position will be made only when there is a change in the number of vacancies pertaining to the same year to which the notified vacancies are related”.

**iii.** Any claim by an applicant that he belongs to Scheduled Caste or Scheduled Caste (Arunthathiyars) or Scheduled Tribe or Most Backward Class / Denotified Community or Backward Class (other than Muslim) or Backward Class (Muslim) that he has obtained a higher or additional qualification made after the submission of an application will not be entertained.

**iv.** The claims of the applicants with regard to the date of birth, educational / technical qualifications, Community, special qualification like Persons Studied in Tamil Medium, Differently Abled, experience, optional subject, language, etc. are accepted only based on the details furnished by them in their applications. The admission of candidature therefore will be provisional and subject to satisfaction of the Commission about their above said criteria like age, educational / technical qualifications, community etc. Mere admission to the interview or inclusion of name in the list will not confer on the applicants any right for appointment. The candidature is therefore, provisional at all stages and the Commission reserves the right to reject any candidature at any stage, even after the selection has been made when anything wrong claim or violation is confirmed.

**v.** Applicants who consider themselves eligible to appear in an examination may apply and write the examination at their own risk, with an undertaking / declaration to that effect viz. before appearing for the examination, it should be ensured by the applicants that on the date of notification of a post he fulfils all the conditions in regard to age, educational qualifications, number of chances etc. as provided in the rules. The candidature of applicants, if found ineligible shall stand cancelled even after declaration of their result.

**vi.** An applicant found by the Commission qualified to compete for the appointment must be prepared to appear when summoned before the Commission at Chennai or at any other Centre in the State at his own expense.

## 6. இதர நிபந்தனைகள்:-

(1) விண்ணப்பதாரர் ஒருவரை தேர்வாணையம் தெரிந்தெடுப்பதால் மட்டுமே அவர் அரசுத்துறையில் பணி நியமனம் பெற உத்தரவாதமளிப்பதாகாது.

(2) விளம்பரப்படுத்தப்படும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் எந்த ஆண்டிற்குரியவையோ, அதே ஆண்டிற்குரிய காலிப்பணியிடங்களில் மாறுதல் ஏற்பட்டால் எழுத்துத்தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்கு வாய்மொழித் தேர்வுக்கு விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முன்பும், எழுத்துத் தேர்வின் அடிப்படையில் மட்டுமே தெரிவு செய்யப்படும் பதவிகளுக்கு நியமனத்திற்கு தெரிவு செய்வதற்கு முன்பும், அப்போதைய காலியிடங்களின் நிலைமைக்கு ஏற்ப அறிவிக்கப்பட்ட காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டதாகும்.

(3) விண்ணப்பத்தைத் தாக்கல் செய்த பிறகு ஒரு விண்ணப்பதாரர், தான் ஆதி திராவிடர் வகுப்பினர் அல்லது ஆதி திராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்) அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் அல்லது இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) என்றோ அல்லது ஓர் உயர்ந்த அல்லது கூடுதல் கல்வித் தகுதியைப் பெற்றவர் என்றோ அவரால் எழுப்பப்படும் கோரிக்கை எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(4) விண்ணப்பங்களில் கொடுக்கப்படும் தகவல்களின் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பதாரர்கள் கோரும் வயது, பொதுக்கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வித் தகுதிகள், சமூகப் பிரிவு, சிறப்புத் தகுதிகள் (தமிழ்வழிக் கல்வி, மாற்றுத் திறனாளிகள், அனுபவம், விருப்பப் பாடம், மொழிப்பாடம், இதர) ஆகியவை ஏற்கப்படுகின்றன. எனவே, மேற்சொன்ன தகவல்களைத் தேர்வாணையம் ஐயமறத் தெளிந்து கொள்ளும் வரை அவர்களின் விண்ணப்பங்கள் தற்காலிகமாக மட்டுமே ஏற்கப்படும். நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவதால் அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக அவரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே ஒரு விண்ணப்பதாரர் பதவி நியமனம் பெற உரிமையளிக்கப்பட்டவராகமாட்டார். எனவே, எல்லா நிலைகளிலும் விண்ணப்பங்கள் தற்காலிகமாக ஏற்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும். எந்நிலையிலும், விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறு என கண்டறியப்படும் பட்சத்தில், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு.

(5) தேர்வு எழுதத் தகுதியுடையவர் என்று கருதும் விண்ணப்பதாரர்கள் அவ்வாறு உறுதிமொழி அளித்தே தேர்வுக்கு விண்ணப்பித்து தமது பொறுப்பில் தேர்வினை எழுதுகிறார்கள். எனவே, தேர்வு எழுதுவதற்கு முன்னால் பதவிக்குரிய அறிவிக்கை நாளன்று விதிகளில் உள்ளபடி வயது, கல்வித்தகுதி, வாய்ப்புகளின் எண்ணிக்கை முதலிய அனைத்து நிபந்தனைகளையும் தாம் நிறைவேற்றுவதை விண்ணப்பதாரர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். தகுதியில்லாத விண்ணப்பதாரர்களின் பணிவேட்புத் தகுதி, தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பும் கூட இரத்து செய்யப்படத்தக்கது.

(6) நியமனத்திற்குப் போட்டியிடத் தகுதியுடையவர் எனத் தேர்வாணையத்தால் கருதப்படும் விண்ணப்பதாரர் சென்னை அல்லது இம்மாநிலத்தின் வேறு ஏதேனும் மையத்தில் நேர்காணலுக்கு வருமாறு ஆணையத்தால் அழைக்கப்பட்டால் அவர் தனது சொந்த செலவில் வருவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

## 7. RESERVATION OF APPOINTMENTS:

Where the rule of reservation of appointments for Scheduled Castes / Scheduled Caste (Arunthathiyars) / Scheduled Tribes / Most Backward Classes / Denotified Communities / Backward Classes (other than Muslim) / Backward Classes (Muslim) is applicable, selection will be made following the rule of reservation. Applicants belonging to the Scheduled Castes, Scheduled Caste (Arunthathiyars), Scheduled Tribes, Most Backward Classes / Denotified Communities, Backward Classes (other than Muslim) and the Backward Classes (Muslim) will also be eligible for selection against the vacancies to be filled under General turns on the basis of merit and where a Scheduled Caste / Scheduled Caste (Arunththiyars) / Scheduled Tribe, Most Backward Class / Denotified Community or Backward Class (other than Muslim) / Backward Class (Muslim) applicant is selected on the basis of merit against the General turn, the vacancy reserved for that particular community will not in any way be affected.

Following the Rule of 30% reservation of appointments for women applicants, due number of vacancies out of the total vacancies in each communal category are being notified as reserved for women applicants. If no qualified and suitable women applicants are available for selection against such vacancies, those vacancies shall be filled by men applicants belonging to the respective communal categories. This clause will not apply to the recruitments meant exclusively for men or women.

Out of vacancies reserved to women applicant in direct recruitment, ten percent of vacancies are reserved for Destitute Widows who possess the prescribed qualifications for appointment to any post in Revised pay scales which do not exceed Rs.5,200 - 20,200 + Grade pay Rs.2,800/- Amendment issued in G.O (MS) No.32 P& AR (S) Department dated 22.03.13 under the State Government. If no qualified and suitable Destitute Widow is available for selection, the turn so set apart for Destitute Widows shall go to the women (other than Destitute widows) belonging to the respective communal categories. In the event of non-availability of qualified and suitable Destitute Widows / women (other than Destitute Widows) applicants for selection, the vacancy will be filled by men applicants, belonging to the respective communal categories.

Out of the total number of vacancies, 5% shall be reserved for Ex-servicemen in the posts which are classified under Group ‘C’, (i.e., the posts with scale of pay, the minimum of which is Rs.4800-10000 + Grade Pay Rs.1400/-) and above but below Rs.9300-34800+ Grade Pay Rs.4400/-) only.

Out of the total number of appointments to be made in the categories, viz., Scheduled Castes, Scheduled Castes-Arunthathiyar (on preferential basis), Scheduled Tribes, Most Backward Classes / Denotified Communities, Backward Classes (other than Backward Class Muslim) Backward Classes (Muslim) and General Turns, one percent under each category shall be separately reserved for each of the blind, hearing impaired and orthopedically challenged applicants. If no qualified and suitable applicant is available for selection from one or more categories of Differently Abled, the vacancies will be carried forward for one time, thereafter, it will be filled as per the Act / rules. The reservation for Differently Abled applicants is applicable to all the Non-executive posts. In so far as the Executive Posts are concerned, the reservation for the Differently Abled applicants shall be made applicable in respect of the suitable posts identified in G.O.Ms.No.13, WDAP (DAP-3.2) department, dated 02.03.2016 in Group ‘A’ and ‘B’ as identified in the list approved by the State Government and to all posts in Group ‘C’ and ‘D’ which will be specified in the Commission’s Notification / Advertisement.

Even after filling up of the 3% of posts reserved for SC Arunthathiyars on preferential basis, if more number of qualified Arunthathiyars are available, they shall be entitled to compete with the Scheduled Castes other than Arunthathiyars in the inter-se merit among them and if any posts reserved for Arunthathiyars remain unfilled for want of adequate number of qualified applicants, it shall be filled up by Scheduled Castes other than Arunthathiyars.

A List for Scheduled Castes, Scheduled Tribes, Most Backward Classes / Denotified Communities and Backward Classes and Backward Classes (Muslim) is given in the **Annexure.**

**Note**: -

**i.** Persons belonging to Tamil Nadu and to any one of the communities mentioned in the lists shown in the Annexure alone shall be treated as Scheduled Caste or Scheduled Tribe or Most Backward Classes / Denotified Communities or Backward Classes and Backward Classes (Muslim) as the case may be. Persons belonging to other States shall not be treated to / as belonging to the Scheduled Caste or Scheduled Tribe or Most Backward Classes / Denotified Communities or Backward Class and Backward Class (Muslim) even though they may belong to any one of the Communities specified in the list.

**ii.** "Arunthathiyar" means the castes, Arunthathiyar, Chakkiliyan, Madari, Madiga, Pagadai, Thoti and Adi Andhra.

**7. நியமன ஒதுக்கீடு**

ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதி திராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்) பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) ஆகியோர் இட ஒதுக்கீடு விதிகளின்படி தெரிவு செய்யப்படுவர். ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதி திராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்) பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களும் பொதுமுறைகளின் (General Turns) மூலம் நிரப்பப்படும் காலியிடங்களுக்குத் தகுதியின் அடிப்படையில் தெரிவு செய்யப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர். அவ்வாறு பொது முறைகள் மூலம் நிரப்பப்படும் காலியிடத்திற்கு தகுதியின் அடிப்படையில் ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்) பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால், அவரது வகுப்புக்காக ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடத்தின் எண்ணிக்கை எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டாது.

பெண்களுக்கான 30% இடஒதுக்கீட்டு விதியின்படி, அனைத்து இடஒதுக்கீட்டுப்பிரிவிலும், பொதுப்பிரிவிலும் பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். தகுதியுடைய பெண்கள் இல்லாத இடங்களில் அந்தந்த ஒதுக்கீடு பிரிவைச் சார்ந்த ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். எனினும், இவ்விதி பெண்கள் மட்டுமே அல்லது ஆண்கள் மட்டுமே பணிபுரிய தகுதியுடையோர் என்ற பதவிகளுக்குப் பொருந்தாது.

சம்பள ஏற்றமுறை ரூ.5200-20200+நிலைச்சம்பளம் ரூ.2800/-க்கு மிகாத பதவிகளுக்கு பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில் 10% பணியிடங்கள் அந்தந்த ஒதுக்கீட்டு பிரிவைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு வழங்கப்படும். ஆதரவற்ற விதவையில்லாத இடங்களில் அந்தந்த ஒதுக்கீட்டுப் பிரிவைச் சார்ந்த பெண்களுக்கு வழங்கப்படும். தகுதியுடைய பெண்களும் இல்லாத இடங்களில் அந்தந்த ஒதுக்கீட்டுப் பிரிவைச் சார்ந்த ஆண்களுக்கு வழங்கப்படும்.

முன்னாள் இராணுவத்தினருக்கு, அரசுப்பணிகளில் Group-C தொகுப்பிலுள்ள பதவிகளில், பதவியின் சம்பள விகிதத்தில் சம்பளம் ரூ 4,800-10,000 + நிலைச் சம்பளம் ரூ 1400/- உடையதும், அதற்கும் அதிகமாக உடையதும் ஆனால் ரூ. 9300-34,800+ நிலைச்சம்பளம் ரூ 4,400-க்குக் குறைவாகக் கொண்ட **பதவிகளில் மட்டுமே** 5% காலிப்பணியிடம் ஒதுக்கீடு செய்யப்படும்.

அனைத்து ஒதுக்கீட்டுப்பிரிவுகளிலும் பொதுப்பிரிவு உட்பட மாற்றுத்திறனாளிகளுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படும். அவை முறையே, பார்வையற்றோர், செவித்திறன் குறைபாடு மற்றும் வாய் பேச முடியாதோர் மற்றும் கை, கால் குறைபாடுடையவர் (Visually Impaired, Deaf and Dump and Orthopedically Disabled) ஆகிய வகையினருக்கு, தலா 1% ஒதுக்கீடு வழங்கப்படும். இவ்வகை ஒதுக்கீட்டிற்குத் தகுதியுடைய மாற்றுத்திறனாளி இல்லாத போது அப்பணியிடம் நிரப்பப்படாமல் அடுத்த தெரிவிற்கு முன்கொண்டு செல்லப்படும். அப்போதும் அந்தந்த வகையினரில் தகுதியுடையோர் இல்லையெனில் அப்பணியிடம் விதிகள் / சட்டத்தின் படி நிரப்பப்படும். இவ்விதி, அரசுப்பணியிடங்களில், பிரிவு C மற்றும் D (Group-C and D) தொகுப்பிலுள்ள அனைத்துப் பதவிகளுக்கும் பொருந்தும். பிரிவு A மற்றும் B (Group-A and B) பதவிகளைப் பொறுத்தவரை அரசாணை எண்.13, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள் 02.03.2016 நாளிட்ட அரசாணையில் பொருத்தமான பதவிகள் என இனம் காணப்பட்ட பதவிகளுக்கு அதில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பொருந்தும்.

அருந்ததியர் இனத்தவர்க்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டில் 3% பணியிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்படும். முன்னுரிமை இடங்களைத் தவிர தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கான இட ஓதுக்கீட்டுப் பிரிவிலும், போட்டித்தகுதியின் அடிப்படையில் அருந்ததியர் தெரிவு செய்யப்படுவர். போதுமான அளவு தகுதி வாய்ந்த அருந்ததிய இனத்தவர் இல்லையெனில் அப்பணியிடங்கள் பிற தாழ்த்தப்பட்ட இனத்தவரைக் கொண்டு நிரப்பப்படும்.

ஆதிதிராவிடர் வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் ஆகியோரின் பட்டியல்கள் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு :-**

(1) தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்து, இணைப்பில் காணும் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சார்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே அவ்விண்ணப்பதாரர்கள் ஆதி திராவிடர் வகுப்பினர் மற்றும் ஆதி திராவிட அருந்ததியர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் என்று கருதப்படுவர். பிறமாநிலங்களைச் சேர்ந்தவர்கள், அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், ஆதிதிராவிடர் வகுப்பினர் மற்றும் ஆதி திராவிட அருந்ததியர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

(2) "அருந்ததியர்" என்பது அருந்ததியர், சக்கிலியன், மாதாரி, மாதிகா, பகடை, தோட்டி,. ஆதி ஆந்திரர் ஆகிய இனத்தைக் குறிக்கும்.

## 8. MINIMUM GENERAL EDUCATIONAL QUALIFICATION:

The minimum general educational qualification wherever referred to means the qualifications specified below:-

1. A pass in the Secondary School Leaving Certificate Examination with eligibility for admission to College Course of Studies in the Universities in this State; or

2. A pass in the Secondary School Leaving Certificate Examination of this State.

**Explanation (i)**

A person who had appeared for 11 year S.S.L.C. Public Examination and obtained 35 per cent of marks in each subject either in one sitting or compartmentally shall be deemed to have passed the S.S.L.C. Public Examination.

**Explanation (ii)**

A person who had appeared for 11 year S.S.L.C Public Examination and had failed to obtain 35 per cent of marks in one or more subjects but who had appeared and obtained 35 per cent of marks in the corresponding subject or subjects in 10 year S.S.L.C. Public Examinations shall be deemed to have passed S.S.L.C. Public Examination.

**Explanation (iii)**

A person who had studied optional subject in 11 year S.S.L.C. and failed in the optional subject, but had obtained 35 per cent of marks in all other subjects except the optional subject in 11 year S.S.L.C. Public Examination, shall be deemed to have passed the S.S.L.C. Public Examination.

**Explanation (iv)**

A person who had appeared and passed the 10th Standard Government Examination conducted by the Board of Open School, Tamil Nadu shall be deemed to have passed the S.S.L.C. Public Examination.

## 8. குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி

குறைந்தபட்ச பொதுக்கல்வித் தகுதி என்று எங்கெங்கு குறிப்பிடப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் அது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் என்று பொருள்படும்.

(1) இம்மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்லூரிப் படிப்புகளுக்கு அனுமதிக்கத் தகுதி பெறும் வகையில் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி அல்லது

(2) இம்மாநிலத்தில் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி.

<u>விளக்கம் - 1</u> ஒரு நபர் பதினொரு ஆண்டு பள்ளி இறுதித்தேர்வு எழுதியிருந்து, ஒவ்வொரு பாடத்திலும் ஒரே முறையிலோ அல்லது பகுதிமுறையிலோ 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தால் அவர் பள்ளி இறுதித் தேர்வில் தேறியவராகக் கருதப்படுவார்.

<u>விளக்கம் - 2</u> ஒரு நபர் பதினொரு ஆண்டு பள்ளி இறுதித்தேர்வில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெறத் தவறி, தோல்வியுற்ற அந்தப் பாடம் அல்லது பாடங்களில் 10 ஆண்டு பள்ளி இறுதித் தேர்வு எழுதி, 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவார்.

<u>விளக்கம் - 3</u> ஒரு நபர் பதினொரு ஆண்டு பள்ளி இறுதித் தேர்வில் விருப்பப்பாடம் எடுத்துப் படித்து, அந்த விருப்பப்பாடத்தில் தோல்வியடைந்திருந்து, விருப்பப்பாடத்தைத் தவிர மற்ற அனைத்துப் பாடங்களிலும் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

<u>விளக்கம்-4</u> ஒரு நபர், தமிழ்நாடு திறந்த வெளிப் பள்ளிக் குழுமத்தினால் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றிருந்தால் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

## <u>9. ADDITIONAL QUALIFICATION / PREFERENCE</u>:

**Other things being equal**, training and experience in the National Cadet Corps and the services rendered in the Defence Force will be regarded as an additional qualification and preference will be given to an outstanding Scout who has received the award of the President of India.

## <u>9. கூடுதல் தகுதிகள் / முன்னுரிமை</u>

மற்ற தகுதி நிலை சமமாக இருக்குமானால், தேசிய மாணவர் படை (என்.சி.சி)யில் பெற்ற பயிற்சியும், அனுபவமும் மற்றும் பாதுகாப்புப் படை (Defence Forces)-ல் ஆற்றிய பணியும் கூடுதல் தகுதியாகக் கருதப்படும். குடியரசுத் தலைவரின் விருது (Award) பெற்ற தலைசிறந்த சாரணருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## <u>10. EQUIVALENT QUALIFICATIONS:</u>

The degree is awarded by any University / Institution recognized by the University Grants Commission that qualification will be generally accepted. applicants who apply for a particular post should possess the prescribed qualification for the post or such other qualification which have been declared to be higher than or equivalent to the said qualification by the State Government in consultation with the Equivalence Committee constituted under the Chairmanship of the Chairman,Tamil Nadu Public Service Commission for the purpose. Applicants claiming Equivalence of Qualification should upload evidence for such claim in the form of G.O. issued prior to the date of notification and produce when called for at the time of Certificate Verification.

## 10. இணையான கல்வித் தகுதி

பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தாலோ, கல்வி நிறுவனத்தாலோ ஒரு பட்டம் வழங்கப்பட்டிருந்தால், அக்கல்வித் தகுதி பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவரை தலைமையாகக் கொண்டு அமைக்கப்பட்ட இணைக்கல்வி பரிந்துரைக்குழுவின் ஆலோசனையின்படி, குறிப்பிட்ட கல்வித் தகுதிக்குச் சமமானதாகவோ அல்லது அதைவிட உயர்வானதாகவோ மாநில அரசால் அறிவிக்கப்பட்ட கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். இணைக்கல்வித்தகுதி பெற்றிருப்பதாக உரிமை கோரும் விண்ணப்பதாரர், தேர்வுக்கான அறிவிக்கை வெளியிடப்படும் நாளுக்கு முன்னதாக இணைக்கல்வி என அறிவிக்கப்பட்ட அரசாணையை சான்றிதழ் சரிபார்ப்பின் போது அளிக்க வேண்டும்.

## 11. QUALIFICATION IN TAMIL:

Every applicant on the date of the Commission's Notification for the post should possess an adequate knowledge in Tamil.

**Explanation:** For this purpose a person will be deemed to possess an adequate knowledge in Tamil in the case of a post for which the educational qualification prescribed is the Minimum General Educational Qualification and above he must have passed the S. S. L. C. / H.S.C / Degree, etc with Tamil as one of the languages or Studied the High School course in Tamil Medium and passed the S.S.L.C Public Examination in Tamil Medium or passed the Second Class Language Test (Full Test) in Tamil conducted by the Tamil Nadu Public Service Commission.

**Note :**

**i.** Applicants who do not possess an adequate knowledge in Tamil may also apply.If selected, they should pass the Second Class Language Test (Full Test) in Tamil within a period of two years from the date of their appointment, failing which they will be discharged from service.

**ii**. The above exemption will not apply to certain posts wherein adequate knowledge in Tamil or a pass in Tamil language is specifically called for in Commission's Notification.

## 11. தமிழ் மொழியில் தகுதி:

ஒவ்வொரு விண்ணப்பதாரரும், தேர்வாணையத்தால் அறிவிக்கை வெளியிடப்படும் நாளின்படி அந்தந்த பதவிக்குரிய போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும்.

**விளக்கம்-** கீழ்க்காணும் தகுதியைப் பெற்றிருந்தால் ஒருவர் போதிய தமிழறிவு பெற்றவராகக் கருதப்படுவார். ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியும் அதற்கு மேலும் இருந்தால், பள்ளியிறுதிப் பொதுத் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி) /பிளஸ்-2/ பட்டப்படிப்பில் தமிழை ஒரு மொழிப்பாடமாக எடுத்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது உயர்நிலைப் பள்ளிப்படிப்பில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு பள்ளியிறுதிப்

பொதுத் தேர்வைத் தமிழில் எழுதித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பெறும் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:-

(i)போதுமான தமிழறிவு இல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். அவர்கள் தேர்வு பெற்றுப் பணியில் நியமிக்கப்பட்டால், பணியில் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தமிழில் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறத் தவறுபவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

(ii) சில பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட தமிழ்மொழிக் கல்வித்தகுதி பெற்றிருப்பது கட்டாயமாகும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட பதவிகளுக்கு மேற்குறிப்பிட்ட விதி பொருந்தாது.

12) **FEE CONCESSION (Amended with effect from 01.03.2017 with reference to G.O. Ms. No. 32, Personnel and Administrative Reforms (M) Department, dated 01.03.2017)**

| Category | Concession | Condition |
|---|---|---|
| Scheduled Castes / Scheduled Caste (Arunthathiyars) | Full Exemption | - |
| Scheduled Tribes | Full Exemption | - |
| Most Backward Class / Denotified Communities | Three Free Chances | Should not have availed three free chances in any of the previous recruitment. |
| Backward Classes (Other than Muslim) / Backward Classes (Muslim) | Three Free Chances | Should not have availed three free chances in any of the previous recruitment. |
| Ex-Servicemen | Two Free Chances | i. Should not have availed two free chances in any of the previous recruitment.<br>ii. Fee concession will not apply for those who have already been recruited to any class or service or category. |
| Differently Abled Person | Full Exemption | The Disability should be not less than 40%. |
| Destitute Widow | Full Exemption | The Destitute Widow Certificate should have been obtained from RDO / Sub-Collector / Assistant Collector. |

**Note 1:**

**i)** In the case of Differently Abled applicants, a Certificate from Medical officer specifying the nature of physical handicap and he should certify that the physical handicap as not one which could render the applicant incapable of efficiently discharging duties should be produced.

**ii)** In the case of Desitute Widow applicants, the applicants must produce Destitute Widow Certificate in support of their claim, whenever they are asked / directed to produce the same.

**Note 2:**

i) Failure to appear for the competitive examination (including oral test) after sending an application will not operate to exclude that chance from the free chances, towards payment of Examination Fee.

ii) The three / two free chances allowed are not for **EACH POST** but for **ANY THREE / TWO APPLICATIONS ONLY**. The claim for exemption from payment of fee made in any application which is rejected / admitted or withdrawn will be counted as having availed a free chance.

iii) The application of an applicant who makes a false claim for exemption from payment of application fee by suppressing information regarding his previous application or applications will be rejected and he will also be debarred from appearing for all future examinations and selections conducted by the Commission.

**12. தேர்வுக் கட்டணச் சலுகை (01.03.2017 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 32-ல் உள்ள ஆணைகளின் அடிப்படையில், 01.03.2017 முதல் திருத்தியமைக்கப்பட்டது) :-**

| வகை | சலுகை | நிபந்தனை |
|---|---|---|
| ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட அருந்ததியர் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை | - |
| பழங்குடியினர் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை | - |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை | ஏற்கனவே மூன்று முறை கட்டணச் சலுகையை பயன்படுத்தி இருக்கக்கூடாது. |

| | | |
|---|---|---|
| இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை | ஏற்கனவே மூன்று முறை கட்டணச் சலுகையை பயன்படுத்தி இருக்கக்கூடாது. |
| முன்னாள் இராணுவத்தினர் | இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை | i. ஏற்கனவே இரண்டு முறை கட்டணச் சலுகையை பயன்படுத்தி இருக்கக்கூடாது.<br>ii. ஏற்கனவே ஏதேனும் ஒரு பதவி / பணியில் சேர்ந்து விட்டால் பின்னர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது. |
| மாற்றுத்திறனாளிகள் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை | உடல் ஊனத்தின் அளவு 40 விழுக்காட்டிற்கு குறைவாக இருத்தல் கூடாது. |
| ஆதரவற்ற விதவை | கட்டணம் செலுத்தத் தேவையில்லை | ஆதரவற்ற விதவைக்கான சான்று வருவாய்க் கோட்டாட்சியர்/சார் ஆட்சியர் / உதவி ஆட்சியரிடம் பெற்றிருக்க வேண்டும். |

**<u>குறிப்பு:-1</u>**

(i) மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு என்ன உடல் ஊனம் என்பதனைக் குறிப்பிட்டு, அத்தகைய உடல் ஊனம் அவருடைய பணிகளைத் திறம்படச் செய்வதற்குத் தடையாக இருக்காது என்று மருத்துவ அதிகாரிகளால் வழங்கப்பட்ட சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) ஆதரவற்ற விதவைகளைப் பொறுத்தமட்டில், ஆதரவற்ற விதவை என்பதற்கான சான்றிதழை தேர்வாணையம் கோரும் வேளையில் சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>குறிப்பு:-2</u>**

(i) விண்ணப்பம் அனுப்பிய பிறகு நேர்முகத் தேர்வு உட்பட போட்டித் தேர்வுக்கு வரத் தவறினாலும் அளிக்கப்பட்டுள்ள கட்டணச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டதாகவே கருதப்படும்

(ii) அளிக்கப்பட்டுள்ள மூன்று / இரண்டு முறைக் கட்டணச் சலுகை ஒவ்வொரு பதவிக்கும் இல்லை. மொத்தமாக ஏதாவது மூன்று / இரண்டு விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருந்தும். எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டாலும், அனுமதிக்கப்பட்டாலும் அல்லது திரும்பப் பெறப்பட்டாலும் அதில் கோரப்படும் கட்டணச் சலுகை, கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

(iii) ஏற்கனவே பெற்ற கட்டணச் சலுகையை மறைத்து பொய்யாகக் கட்டணச் சலுகை கோரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தால் நடத்தப்படும் எதிர்வரும் தேர்வுகளில் கலந்து கொள்வதிலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள்.

## 13. CONCESSION FOR EX-SERVICEMEN:

(i) An ex-serviceman who has not completed 48 years of age, if he does not belong to Scheduled Caste or Scheduled Tribe or Backward Class (OBCM) or Backward Class Muslim or Most Backward Class or Denotified Community and 53 years, if he belongs to Scheduled Caste or Scheduled Tribe or Backward Class (OBCM) or Backward Class Muslim or Most Backward Class or Denotified Community on the 1st day of july of the year in which the selection for appointment is made, but is otherwise qualified shall be eligible for such appointment."

(ii) Persons serving in the Armed Forces shall be eligible to apply for posts under the Government if they are due to complete the specified term of their engagement in the Armed Forces within one year from the last date prescribed by the appropriate authority for receipt of the application in respect of a particular recruitment. All such applicants while making their applications shall submit a self undertaking and a form of certificate from their Commanding Officer in the format given below.

### Undertaking to be given by the applicant

I hereby accept that, if selected on the basis of the recruitment / examination to which this application relates, I will produce documentary evidence to the satisfaction of the appointing authority that I have been duly released /retired /discharged from the Armed Forces and I am entitled to the benefits admissible to Ex-servicemen given under rule 52 of General Rules for Tamil Nadu State and Subordinate Services as amended from time to time.

Place: Signature of the applicant

## Form of certificate for serving personnel

I hereby certify that, according to the information available with me (No) (Rank) (Name) is due to complete the specified term of his engagement with the Armed Forces on the (date)

Place:
Date : Signature of the Commanding Officer

**Note 1**: “Ex-serviceman” means,

**I.** any person who had served in any rank (whether as Combatant or not) in the Armed Forces of the Union and has been released there from on or before the 30th June 1968 otherwise than by way of dismissal or discharge on account of misconduct or inefficiency; or

**II.** any person who had served in any rank (whether as Combatant or not) in the Armed Forces of the Union for a continuous period of not less than six months after attestation and released therefrom between 1st July 1968 and 30$^{th}$ June 1979 (both days inclusive) otherwise than by way of dismissal or discharge on account of misconduct or inefficiency; or

**III.** any person who had served in any rank (whether as Combatant or not) in the Armed Forces of the Union for a continuous period of not less than six months after attestation if released between 1st July 1979 and 30th June 1987 (both days inclusive)

- **i.** for reasons other than at his own request or by way of dismissal or discharge on account of misconduct or inefficiency; or
- **ii.** at his own request after serving for a period of not less than five years; or

**IV.** any person who had served in any rank (whether as Combatant or not) in the Armed Forces of the Union, and had retired or had been released on or after 1$^{st}$ July 1987 from such service:

i) at his own request after earning his pension; or

ii) on medical grounds attributable to military service or circumstances beyond his control and awarded medical or other disability pension;or

iii) otherwise than at his own request after earning his pension, as a result of reduction in establishment; or

iv) after completing specific period of engagement, otherwise than at his own request or by way of dismissal or discharge on account of misconduct or inefficiency and has been given a gratuity.

**V.** any person of the Territorial Army of the following categories, namely, pension holder for continuous embodied service, person with disability attributable to military service and gallantry award winner retired on or after 15th November1986; or

**VI.** any person of the Army Postal Service, who retired on or after 19th July 1989 directly from the said service without reversion to Postal & Telegraph Department with pension or who has been released on or after 19th July 1989 from such service on medical grounds attributable to military service or circumstances beyond his control and awarded medical or other disability pension; or

**VII.** any person discharged on or after July 1987 under Army Rule 13(3) III (V) for the reason that his service is no longer required and in receipt of pension;

**Note 2**: Ex-service Men – does not mean the wards of those mentioned above.

**Note 3**: In all cases**,** an ex-Serviceman once recruited to a post in any class or service or category, can not claim the concession of being called an ex-serviceman for his future recruitment.

**Note 4:** a person discharged before July 1987 under Army Rule 13 (3) III (V) for the reason that his Service is no longer required is not an ex-serviceman. An applicant who claims to have been demobilised from the Army or Navy or Air Force should produce in support of his claim properly authenticated extract from his Discharge Certificate in the following form:-

(1) Name of the applicant
(2) Rank held
(3) Date of enrolment
(4) Date of discharge
(5) Reasons for discharge
(6) Conduct and Character while serving in the defence forces.

**13. முன்னாள் இராணுவத்தினருக்கான சலுகை**

(1) தெரிவு நடத்தப்பெறும் ஆண்டின் ஜூலை முதல் நாள் அன்று ஐம்பத்து மூன்று வயதிற்குக் குறைந்த ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் வகுப்பினர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் ஆகியோர். ஏனையோர் நாற்பத்தெட்டு வயதிற்குக் குறைந்தவர்கள்.

(2) அறிவிக்கை வெளியிட்டு விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான இறுதிநாளிலிருந்து ஓராண்டுக்குள் முப்படை பணியிலிருந்து விடுவிப்புப் பெறவிருக்கும் இராணுவ வீரர்கள் அனைத்து தகுதிகளையும் பெற்றிருப்பின் அவர்களும் விண்ணப்பிக்கலாம். அவ்வகை விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் படிவத்தில் உறுதிமொழி படிவத்தினை அளிக்க வேண்டும்.

## Undertaking to be given by the applicant

I hereby accept that, if selected on the basis of the recruitment / examination to which this application relates, I will produce documentary evidence to the satisfaction of the appointing authority that I have been duly released /retired /discharged from the Armed Forces and I am entitled to the benefits admissible to Ex-servicemen given under rule 52 of General Rules for Tamil Nadu State and Subordinate Services as amended from time to time.

Place: Signature of the applicant

## Form of certificate for serving personnel

I hereby certify that, according to the information available with me (No) (Rank) (Name) is due to complete the specified term of his engagement with the Armed Forces on the (date)

Place:

Date : Signature of the Commanding Officer

குறிப்பு:-1 "முன்னாள் இராணுவத்தினர்" என்பவர்,

(அ )இந்தியப் பாதுகாப்புப் படைகளில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ, களவீரரல்லாதவராகவோ) பணிபுரிந்து, தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமல் 30.06.1968 அன்றோ அதற்கு முன்பாகவோ பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

(அல்லது)

(ஆ) இந்தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ, களவீரரல்லாதவராகவோ) ஏற்புடையவராகக் கொள்ளப்பட்டபின் (after attestation) தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கும் குறையாத பணிபுரிந்து தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமல் 01.07.1968 முதல் 30.06.1979 வரையிலான காலத்தில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

(அல்லது)

(இ) இந்தியப் பாதுகாப்புப் படையில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ, களவீரரல்லாதவராகவோ) ஏற்புடையவராகக் கொள்ளப்பட்டபின் தொடர்ந்து ஆறுமாத காலத்திற்கும் குறையாத பணிபுரிந்து தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமலும் சொந்த விருப்பத்தில் வெளிவந்தவராக அல்லாமலும் 01.07.1979 முதல் 30.06.1987 வரையிலான காலத்தில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர் மற்றும் ஐந்தாண்டுகளுக்குக் குறையாமல் பணிபுரிந்து சொந்த விருப்புப் பேரில் விடுவிக்கப்பட்டவர்.

(அல்லது)

(ஈ) இந்தியப் பாதுகாப்புப் படைகளில் எந்தவொரு பதவி நிலையிலேனும் (Rank) (களவீரராகவோ, களவீரரல்லாதவராகவோ) பணிபுரிந்து 01.07.1987 அன்றோ அதற்குப் பிறகோ அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

(i) அவருடைய சொந்த விருப்பத்தில் ஓய்வூதியத்துடன் வெளிவந்தவர்
(ii) இராணுவப் பணியின் காரணமாகவோ அல்லது அவரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைக் காரணங்களினாலோ மருத்துவ அல்லது இயலாமை ஓய்வூதியம் பெற்று வெளிவந்தவர்
(iii) படைக்குறைப்புக் காரணமாக ஓய்வூதியத்துடன் வெளிவந்தவர்.
(iv) குறிப்பிட்ட காலம் பணிபுரிந்து தவறான நடத்தை அல்லது திறமையின்மை காரணங்களுக்காகப் பணியறவு அல்லது பணிநீக்கம் செய்யப்பட்டவராக அல்லாமலும் சொந்த விருப்பத்தில் வெளிவந்தவராக அல்லாமலும் பணிக்கொடை பெற்று வெளிவந்தவர்.

(அல்லது)

(உ) 15.11.1986 அன்றோ அதற்குப் பிறகோ ஓய்வு பெற்ற பிராந்திய இராணுவப் படையைச் சேர்ந்த பின்வரும் வகையினர் 1) பிராந்திய இராணுவப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டபின் (embodied) தொடர்ச்சியான பணிக்காக ஓய்வூதியம் பெற்றவர் 2) படைப்பணியின் காரணமாக ஊனமடைந்தவர் 3) வீர விருது பெற்றவர்

(அல்லது)

(ஊ) இராணுவ அஞ்சல் பிரிவினைச் சேர்ந்த பின்வரும் வகையினர்

1. தபால் தந்தித் துறையிலிருந்து இராணுவ அஞ்சல் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் தபால் தந்தித் துறைக்குத் திரும்ப அனுப்பப்படாமல் இராணுவ அஞ்சல் பணியிலேயே 19.07.1989 அன்றோ அதற்குப் பிறகோ ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுபவர்கள்.

2. படைப்பணியினாலோ தன் கட்டுப்பாட்டிற்கு மீறிய சூழ்நிலைகளினாலோ மருத்துவ அல்லது வேறு பிற இயலாமை ஓய்வூதியத்துடன் 19.07.1989 அன்றோ அதற்குப் பிறகோ மருத்துவக் காரணத்தினால் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்.

(எ) இராணுவ விதி 13 (3)III (V)-ன் கீழ் அவரது பணி இனிமேலும் தேவைப்படாத காரணத்தினால் ஜூலைத் திங்கள் 1987-க்குப் பிறகு பணியிலிருந்து விலக்கப்பட்டு ஓய்வூதியம் பெறுபவர்.

குறிப்பு:-2

இராணுவவீரர்களின் வாரிசுதாரர்கள் முன்னாள் இராணுவத்தினராக கருதப்படமாட்டார்கள்.

குறிப்பு:-3

முன்னாள் இராணுவத்தினர் ஏதேனும் ஒரு பதவி / பணியில் சேர்ந்து விட்டால் பின்னர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.

குறிப்பு:-4

இராணுவ விதி 13 (3) III (V)-ன் கீழ் பணி தேவைப்படாத காரணத்தினால் 1987-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களுக்கு முன் பணியிலிருந்து விலக்கப்பட்டவர், முன்னாள் படைவீரராகக் கருதப்படமாட்டார். கோரிக்கைக்கு ஆதாரமாக அவரது பணி விடுவிப்புச் சான்றிதழிலிருந்து (Discharge Certificate) தகுந்த முறையில் எடுக்கப்பட்டு உறுதியொப்பமிட்ட எடுகுறிப்பைப் பின்வரும் படிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

(1) பணிவேட்பாளரின் பெயர்
(2) வகித்த பதவி
(3) படையில் சேர்ந்த நாள்
(4) விடுவிக்கப்பட்ட நாள்
(5) விடுவிக்கப்பட்டதற்கான காரணங்கள்
(6) இராணுவத்தில் பணி புரிந்த போது நடத்தையும் ஒழுக்கமும்

**14. AGE CONCESSION ONLY:**

**a) Ex-N.C.C Cadets who were employed as Under Officer, Instructors, or Sergeant-Major- Instructors in the N.C.C on whole time basis on or after 1st January 1963** may also apply if they possess all the prescribed qualifications except the age. Allowed to deduct from their age, the actual period of service as Under Officers, Instructors, or Sergeant-Major- Instructors in the N.C.C. The relevant age rule will be relaxed by the Government in their favour if they are otherwise found to be suitable.

**b) Differently Abled persons**

Will be eligible for age concession upto ten years over and above the age-limit prescribed. Provided they are found to be otherwise suitable and the medical authorities are satisfied that the physical handicap is not such as it would render them incapable of efficiently

discharging the duties of the post for which they are selected. Such applicants should produce a certificate as laid down in G.O.Ms.No.927, B.C.W.N.M.P and S.W. Department, dated 6th November 1989, and the norms suggested by the Government of India for this purpose from a Medical Officer concerned in the relevant specialty specifying the nature of physical handicap and the degree of disability based on the norms laid down and further stating whether the Medical Officer considers the physical handicap is not such as it would render him incapable of efficiently discharging the duties of the post for which he is selected.

**Note:**

**i.**Save or otherwise the concessions specified in the Commission's "Instructions to applicants" and any other concessions to be notified in the Commission's Notification / Advertisement in respect of Differently Abled persons will be applicable to them only if their degrees of physical disability is 40 percent and above.

**ii.** In case of doubt that the certificate issued by the Medical Officer does not confirm to the eligibility criteria, for classification of handicapped, the matter will be referred to the appropriate Medical Board.

**C) Bonded Labourers:**

applicants can apply for posts under Groups C and D (i.e. if the starting pay in the Revised Scale of pay of the post is below Rs.9,300 - 34,800 + Grade Pay Rs.4,400/-). They are eligible for age concession if they themselves have been released from Bonded Labour System / their sons or unmarried daughters, of such released Bonded Labour. Eligible to apply if they had not completed 40 years of age on the 1st July of the year in which the selection for appointment is made. Applicants should produce a certificate in the form specified below from the authority competent to issue Community Certificate to show that they have been released from the Bonded Labour under the Provision of the Bonded Labour System (Abolition) Act' 1976.

**CERTIFICATE**

This is to certify that Thiru/Tmt/Selvi ...............………is the Son/Unmarried daughter of Thiru …………………...residing at …………………………Village ............................Taluk…….......... District has himself / herself been released from Bonded Labour under the provisions of the Bonded Labour System (Abolition) Act' 1976 on..........................

**d) Discharged and serving temporary Government employees:**

Who have not completed 40 years of age on the 1st July of the year in which the selection is made allowed to deduct from their age the actual period of service (Whether continuous or non-continuous) rendered upto the date of the Commission's Notification under the

Tamil Nadu Government in computing their age.

**Note:-**

A discharged State Government employee is a person who was in the employment of the State and was discharged because of reduction in establishment or for any other reason but not on a disciplinary proceeding.

## 14. வயது வரம்பு சலுகை மட்டும்

(அ) 1963 ஜனவரி முதல் நாள் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப்படையில் தேசிய மாணவர் படையில் (National Cadet Corps) சார்நிலை அலுவலர் பயிற்றுநர்கள் (Under Officer Instructors) அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக வேலையில் அமர்த்தப்பட்டிருந்த தேசிய மாணவர் படையின் முன்னாள் பயிற்றுநர்கள் வயதுத் தகுதியைத் தவிர நிர்ணயிக்கப்பட்ட பிற தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தால் விண்ணப்பிக்கலாம். அவர் தேசிய மாணவர் படையில் சார்நிலை அலுவலர் பயிற்றுநர்களாக அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக எவ்வளவு காலம் பணிபுரிந்துள்ளார்களோ அக்கால அளவை அவர்களுடைய வயதிலிருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். இத்தகைய விண்ணப்பதாரர்கள் மற்றபடி தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டால், அவர்களுக்காக வயது சம்பந்தப்பட்ட விதி அரசால் தளர்த்தப்படும்.

**(ஆ) மாற்றுத் திறனாளிகள்**

நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது சலுகை பெறத் தகுதியுடையவராவார்கள். தெரிந்தெடுக்கபட்ட பதவிக்கு மற்றபடி தகுதியானவர்களாயிருப்பதுடன் இந்திய அரசு நிர்ணயித்துள்ள வரையறைகளின் படியும் 06.11.1989 நாளிடப்பட்ட B.C.W.N.M.P and S.W துறையின் அரசாணை (பலவகை) எண்.927-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடியும் ஒரு மருத்துவ அலுவலரிடமிருந்து பெற்ற ஒரு சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். அச்சான்றிதழ் உடல் ஊனத்தின் இயல்பையும் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் படி இயலாமையின் அளவையும் குறிப்பிடுவதோடு அவர் தெரிந்தெடுக்கப்படும் பதவியில் திறம்படப் பணியாற்றுவதற்கு அவரது உடல் ஊனம் எவ்வகையிலும் தடையாக இருக்காது என்று அந்த மருத்துவ அலுவலரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

<u>குறிப்பு</u>

(1) தேர்வாணையத்தின் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகள் பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டாலொழிய, தேர்வாணையத்தின் அறிவிக்கையில் / விளம்பரத்தில் அறிவிக்கப்படும் சலுகைகளும் அவர்களது உடல் ஊனத்தின் அளவு 40% அல்லது அதற்குமேலாக இருந்தால் **மட்டுமே** அவர்களுக்குப் பொருந்தும்.

(2) மருத்துவ அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழ் உடல் ஊனத்தை வகைப்படுத்தும் தகுதிக் கூறுகளுக்கு இணங்க அமையவில்லை என்ற ஐயம் ஏற்படின் அச்சான்றிதழ் உரிய மருத்துவ குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படும்.

**(இ) பிணைத் தொழிலாளிகள்**

“சி” மற்றும் “டி” பிரிவுகளின் கீழ்வரும் பதவிகளுக்கு, (அதாவது பதவியின் திருத்திய சம்பள விகிதத்தில் ஆரம்ப சம்பளம் ரூ.9,300-34800+நிலைச்சம்பளம் 4400/- க்கும் குறைவாக கொண்டவை)விடுவிக்கப்பட்ட பிணைத்தொழிலாளியாக அல்லது அப்படிப்பட்டவர்களின் புதல்வராக அல்லது திருமணமாகாத புதல்வியராக இருப்பின் வயது வரம்பில் சலுகை பெறத் தகுதியுடையவராவர். அவர்கள் பணிநியமனம் செய்யப்படும் வருடத்தில் ஜூலை மாதம் முதல் தேதியன்று 40 வயது நிரம்பாதவராக இருக்க வேண்டும். இவர்கள் 1976-ம் ஆண்டு பிணைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டத்தின் வழிவகைப்படி விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளிகள் என்பதற்கான சான்றிதழைக் கீழ்க்கண்ட படிவத்தில் சாதிச் சான்றிதழ் வழங்கக் கூடிய தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்று அனுப்ப வேண்டும்.

**சான்றிதழ்**

------------------------------------ மாவட்டம் ----------------------------------வட்டம் -------------------------------------------- கிராமத்தில் வசித்து வரும் திரு--------------------------------------------- என்பவருடைய மகன் / திருமணமாகாத மகள் திரு/செல்வி----------------------------------1976-ம் ஆண்டு பிணைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்ட வழிவகைப்படி----------------------------------------அன்று விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளி/ இவருடைய பெற்றோர் விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளி என்று சான்று அளிக்கிறேன்.

**(ஈ) விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலுள்ள தற்காலிகப் பணியாளர்கள்**

தெரிவு செய்யப்படும் ஆண்டில் ஜூலைத் திங்கள் முதல் நாளன்று 40 வயது முடிந்திருக்கக்கூடாது. தமிழ்நாடு அரசின் தற்காலிகப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களும் அப்பணியில் தொடர்ந்து தேர்வாணையத்தின் அறிவிக்கை நாள்வரையில் தற்காலிகமாகப் பணியாற்றிய பணிக்காலத்தை (தொடர்ச்சியாகவோ அல்லது தொடர்ச்சியின்றியோ) தம்முடைய வயதிலிருந்து கழித்துக் கணக்கிட்டுக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

<u>குறிப்பு</u>

மாநில அரசில் பணியாற்றி, ஆட்குறைப்பு காரணமாகவோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை நீங்கலாக வேறு யாதொரு காரணத்திற்காகவோ பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மட்டுமே “பணிவிடுவிப்பு செய்யப்பட்ட மாநில அரசு அலுவலர்களாகக் கருதப்படுவர்”.

**15. PRODUCTION OF EVIDENCE FOR CLAIMS MADE IN THE APPLICATION:**

The Original Certificates in support of the claims made in the on-line application, should be produced at the time of the Certificate Verification - Oral Test or when called for by the Commission. One set of xerox copies of all certificates along with a copy of photograph identical to the one that was submitted in the application, should also be produced while attending the Certificate Verification - Oral Test or when called for. An applicant who has applied to the Commission on a previous occasion should produce the required documents even though they might have produced the same on a previous occasion and were returned to him.

**a) Evidence of date of birth** viz.,

(i) The Secondary School-Leaving Certificate; or

(ii) A certificate from a University or College, or School authority showing date of birth, according to the University or College or School records. (The certificate of Baptism or extract from Register of Births, cannot be accepted) or

(iii) Extract from the Service Register showing date of birth in respect of persons holding regular appointment under the State Government.

**b) Two certificates of Character and Conduct:**

(i) From the Head of the Institution (other than that of a Tutorial College or Tutorial School or a Type-writing and / or Shorthand Institution) in which the applicant last studied or is studying, as the case may be.

(ii) From a Government Officer belongs to Group A or B who knows the applicant personally, obtained not earlier than the first day of the month, in which the recruitment is notified. This certificate must be based on personal knowledge and experience of the applicant and not from a relative.

**Note:-**

**i.** If the period of study at the Institution in which the applicant last studied or is studying as the case may be, is less than one academic year, he must produce also another certificate from the Head of the Institution, in which he last studied for not less than one academic year.

**ii.** No two certificates may be obtained from the same person.

**c) Documents evidencing the qualification prescribed for the appointment, including qualification in Tamil.**

Copies of Degree (10+2+3) or Provisional Certificate alone will be accepted as evidence of qualifications. However, in case the Degree Certificate is lost or is not immediately available for reasons to be specified, extract from the Convocation Register will be

accepted as evidence of qualification. Copies of Mark Sheets or Grade Certificates will not be accepted as sufficient evidence. In the case of an applicant, who claims to possess adequate knowledge in Tamil, whether his mother-tongue is Tamil or not, a certificate evidencing that he had taken Tamil as a language in his S.S.L.C. Public Examination or had taken all the non language subjects in the S.S.L.C. Public Examination in Tamil Medium or he had passed the Second Class Language Test (Full Test) in Tamil must be produced.

**d) Practical / Other Experience / Bar Experience**

In cases where the qualifications announced for a post include a period of practical or other experience, in addition to educational qualification / technical qualification, such a period of practical or other experience, as the case may be should have been acquired after obtaining the educational / technical qualifications prescribed for such appointment unless otherwise specified. Certificate regarding Practical Experience, if any, prescribed, should conform to the requirements notified. Certificate regarding Bar Experience should conform to the requirements notified. These certificates will be subjected for verification. Hence, documents in support of the contents of such certificates must be available.

**e) Registration Certificates**

Applicants applying for the posts for appointment to which registration of their names in Councils like Bar Council or Central Board of Indian Medicine, Chennai and / or the Board of Integrated Medicine, Chennai / Tamil Nadu Siddha Medical Council / Tamil Nadu Board of Indian Medicine, Tamil Nadu Medical Council or Tamil Nadu Homoeopathy Council or Tamil Nadu Veterinary Council, as the case may be, is a pre-condition, they should have registered their names **before the date of the Commission's notification for appointment** and the copy of the Registration Certificate should be sent along with the other documents evidencing their qualification. Original of the same has to be produced at the time of certificate verification along with other certificates.

**f) Community Certificate**

In the case of an applicant who claims to be a member of SC/ SC(A) or ST or MBC/DC or BC(Other than BCM)or BC(M), a certificate from the following authority noted against each should be produced in the form prescribed referred to in G.O.Ms.No.781, Revenue department, dated 2nd May 1988

| Name of the Community | Competent Authority to issue the Certificate |
|---|---|
| ST | R.D.O / Assistant Collector / Sub-Collector / Personal Assistant (General) to the Collector of Chennai / District Adi-Dravidar Welfare Officer. |
| SC / SC(A) | Taluk Tahsildar |
| MBC / DC, BC (other than Muslim) and BC(M) | Revenue Officer not lower in rank than a Tahsildar or Head Quarters Deputy Tahsildar or Special Deputy Tahsildar appointed to issue Community Certificate. Additional Head Quarters Deputy Tahsildar and Zonal Deputy Tahsildar |
| Thottia Naicker (including Rajakambalam, Gollavar, Sillavar, Thockalavar, Thozhuva Naicker, and Erragollar) included in the list of MBC / DC | Head Quarters Deputy Tahsildar |

Community Certificate should have been issued by the competent authorities referred to above, in whose jurisdiction the applicant claims to have permanent residence, after personal enquiries and proper verification. The certificate obtained by the applicants in the form other than the one referred to in G.O.Ms.No.781, Revenue department, dated 2nd May 1988 and solely based on the entries in S.S.L.C or Transfer Certificate or other School / College records will not be accepted. Applicants are warned that if the community recorded in the certificate produced by them from the competent authority is not included in the list of Scheduled Castes, SC(A), Scheduled Tribes, Most Backward Classes / Denotified Communities, Backward classes (Other than Muslims) or BC(M) given in the Annexure of this "Instructions to applicants", they will not be considered as belonging to Scheduled Caste, SC(A), Scheduled Tribes or Most Backward Classes / Denotified Communities, Backward Classes (other than Muslims) or BC(M) as the case may be. They will, in that case, be considered only under 'Others Category' and if they are not qualified to be considered under 'Others Category', their applications will be rejected.

**g) No Objection Certificate**

Persons who are in the service of the Indian Union or a State in India or in the employment of Local Bodies or Universities, or Quasi Government Organizations constituted under the authority of the Government of India or of a State in India whether in regular service or in a temporary service need not send their applications through their Head of Department or Employer. Instead, they may directly apply to the Commission after duly informing their Employer in writing that they are applying for the particular recruitment and with the condition that they should produce "No Objection Certificate" in the form prescribed below, from an authority not below their Officer / Division Head at the time of attending the Certificate Verification.

**NO OBJECTION CERTIFICATE BY THE HEAD OF DEPARTMENT OR OFFICE OR EMPLOYER**

1. Name of the applicant
2. Name of the Post held
3. Whether the applicant is employed temporarily under the emergency provisions or whether the applicant is a probationer or an approved probationer or a full member of any of the sub-ordinate/State Services?
4. Period of Employment From (date) To (date)
   Endorsement No. Dated

(a) I have no objection to the applicants's application being considered for the post of / recruitment of ------------------------------------
(b) Certified that Thiru/Tmt/Selvi ………………………………………… has the following punishment / has no punishment to his credit.
(C) It is also certified that no charge or / and criminal case is pending against him. (If there is pending copy of documents to be enclosed)

Place Office Seal & Date Signature

Designation

**Note** : (i) Persons who get employment after the submission of their applications and before the receipt of intimation admitting them to the Certificate Verification / Oral Test / requiring to produce original documents for verification should also produce the "No objection Certificate". (ii) In case any Criminal / Disciplinary action is taken against or if any punishment is imposed against such persons after the production of "No objection Certificate" and before the actual appointment, such applicants should report this fact forthwith to the Commission indicating their Register Number. Any violation or failure to comply with these instructions will end in rejection of candidature.

**<u>15. சான்றுகள் சமர்ப்பித்தல்:-</u>**

இணையவழி விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள விவரங்களுக்கு சான்றாக இருக்கும் மூலச்சான்றுகள் மற்றும் அதன் ஒளிம நகல்கள், புகைப்படம் ஆகியவற்றை சான்றிதழ் சரிபார்ப்பின் பொழுதோ, நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளும் பொழுதோ அல்லது தேர்வாணையம் கேட்கும் தருணத்திலோ தாக்கல் செய்தல் வேண்டும்.

முந்தைய சந்தர்ப்பம் ஒன்றில் தேர்வாணையத்திற்கு விண்ணப்பித்திருந்த ஒரு விண்ணப்பதாரர் கோரப்படும் ஆவணங்களை ஏற்கனவே அனுப்பி வைத்து திரும்ப பெற்றிருப்பினும், அவற்றை மறுபடியும் கோரும் பொழுது தாக்கல் செய்ய வேண்டும்.

**(அ) பிறந்த தேதிக்கான சான்று**

(i) உயர்நிலைப் பள்ளியை விட்டு சென்றதற்கான சான்றிதழ் (S.S.L.C) அல்லது

(ii) பல்கலைக்கழகத்தின் அல்லது கல்லூரியின் அல்லது பள்ளியின் ஆவணங்களில் கண்டுள்ளவற்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் அல்லது கல்லூரி அல்லது பள்ளி அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட பிறந்த தேதியை காட்டுகிற ஒரு சான்றிதழ் (ஞானஸ்தான (Baptism) சான்றிதழ்) அல்லது பிறப்பு பதிவேட்டின் எடு குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது அல்லது

(iii) மாநில அரசின் கீழ் முறையான பணியிலுள்ள விண்ணப்பதாரர்களின் பணிப்பதிவேட்டிலிருந்து அவர்களுடைய பிறந்த தேதிக்கு ஆதாரமாக எடுக்கப்பட்ட எடு குறிப்பு.

**(ஆ) ஒழுக்கம் மற்றும் நடத்தைப்பற்றிய சான்றிதழ்கள்**

(1) விண்ணப்பதாரர் கடைசியாகப் படித்த அல்லது படித்துக் கொண்டிருக்கின்ற (தனிப்பயிற்சிக் கல்லூரி (Tutorial College) அல்லது பள்ளி அல்லது தட்டச்சு / சுருக்கெழுத்து பயிற்சி நிலையம் தவிர) கல்வி நிலையத்தின் தலைவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்.

(2) விண்ணப்பதாரரை நேர்முகமாகத் தெரிந்துள்ள ஒரு “அ” அல்லது “ஆ” நிலை அரசு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ். இது நியமனத்திற்கான அறிவிக்கை வெளியிடப்பட்ட மாதத்தின் முதல் நாளுக்கு முன்னதாக இருக்கக் கூடாது. இச்சான்றிதழ் விண்ணப்பதாரரைப் பற்றிய நேர்முகமான அறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஒரு உறவினரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் கூடாது.

குறிப்பு:-

(i) விண்ணப்பதாரர் கடைசியாகப் படித்த அல்லது படித்துக்கொண்டிருக்கின்ற கல்வி நிலையத்தில் அவர் படித்த கால அளவு ஒரு கல்வியாண்டிற்குக் குறைவாக இருந்தால், ஒரு கல்வியாண்டிற்குக் குறையாமல் அவர் கடைசியாகப் படித்த கல்வி நிலையத் தலைவரிடமிருந்து மற்றொரு சான்றிதழையும் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

(ii) ஒரே நபரிடமிருந்து இரண்டு சான்றிதழ்கள் பெறுதல் கூடாது.

**(இ) நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளுக்கு (தமிழில் பெற்றிருக்க வேண்டிய தகுதி உட்பட) சான்றாக இருக்கும் ஆவணங்கள்**

(1) பட்டம் (Degree (10+2+3)) அல்லது பட்டத்தின் தற்காலிக சான்றிதழின் (Provisional Certificate) நகல்கள் மட்டுமே கல்வித்தகுதிக்குரிய சான்றாக ஏற்றுக் கொள்ளப்படும். மதிப்பெண்கள் பட்டியல் அல்லது மதிப்பெண் நிலைச் சான்றிதழ் (Grade Certificate) ஆகியவற்றின் நகல்கள் போதுமான ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. எனினும் பட்டச் சான்றிதழ் தொலைந்து போயிருந்தாலோ அல்லது ஏதாவது காரணத்தால் உடனடியாக கிடைக்கவில்லையென்றாலோ பட்டமளிப்பு விழாவிற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்ட எடு குறிப்பின் நகல்கள் கல்வித் தகுதிக்குரிய சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) போதிய தமிழ் அறிவு பெற்றிருப்பதாகக் கோரும் விண்ணப்பதாரர் அவருடைய தாய்மொழி தமிழாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர் பள்ளியிறுதி பொதுத்தேர்வில் தமிழை ஒரு மொழியாக எடுத்து படித்திருந்தாலோ அல்லது மொழி அல்லாத மற்ற எல்லா பாடங்களையும் தமிழில் படித்திருந்தாலோ அல்லது இரண்டாம் வகுப்பு மொழித்தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருந்தாலோ அதன் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

**(ஈ) நடைமுறை அனுபவம் / மற்ற அனுபவம் / வழக்குரைத்தலில் அனுபவம் (Bar Experience)**

தனியாக கோரப்பட்ட இனங்களைத் தவிர, அறிவிக்கப்பட்ட பதவிக்கான கல்வித் தகுதி / தொழில்நுட்பத் தகுதியுடன் நடைமுறை அனுபவம் / மற்ற அனுபவங்கள் ஏதாவது தேவையென அறிவிக்கப்பட்டிருந்தால் அப்பதவிக்கான கல்வித் தகுதி / தொழில்நுட்ப தகுதிகளைப் பெற்ற பிறகே அவ்வனுபவங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். நடைமுறை அனுபவத்திற்கான சான்றிதழ் ஏதும் தேவையென அறிவிக்கப்பட்டிருப்பின் அச்சான்றிதழ் தேர்வாணைய அறிவிக்கையில் அறிவிக்கப்பட்ட விவரங்களுக்கு இணங்க இருத்தல் வேண்டும். வழக்குரைத்தலில் அனுபவத்திற்கான சான்றிதழும் தேர்வாணைய அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள விவரங்களுக்கு இணங்க இருத்தல் வேண்டும். இவ்வகைச் சான்றுகள் மெய்த்தன்மை ஆய்விற்கு உட்பட்டதாகும். இது தொடர்பாக ஆதாரச் சான்றுகளையும் பெற்றிருக்க வேண்டும்.

**(உ) பதிவுச்சான்றிதழ்கள்**

வழக்குரைஞர் மன்றம் அல்லது மத்திய இந்திய மருத்துவ மன்றம், சென்னை மற்றும் / அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட மருத்துவ மன்றம், சென்னை / தமிழ்நாடு சித்த மருத்துவ மன்றம் / தமிழ்நாடு இந்திய மருத்துவ மன்றம், தமிழ்நாடு மருத்துவ மன்றம், தமிழ்நாடு ஹோமியோபதி மன்றம் அல்லது தமிழ்நாடு கால்நடை மருத்துவ மன்றம் போன்றவற்றில் பதிவு செய்திருப்பது, எந்தப் பணிகளில் பணியாற்றுவதற்கு அவசியம் என்று விதிமுறைகள் உள்ளனவோ அந்தப் பணிகளுக்கான தேர்வாணையத்தின் அறிவிக்கை தேதிக்கு முன்னரே அவ்வாறு பதிவு செய்யப்பட்டு, பதிவு சான்றிதழின் நகலை அவர் தகுதிக்காதாரமாக அனுப்பப்படும் மற்ற சான்றிதழ்களோடு அனுப்ப வேண்டும். மூலச்சான்றினை சான்றிதழ் சரிபார்ப்பின் பொழுது மற்ற சான்றிதழ்களோடு அளிக்க வேண்டும்.

**(ஊ) சாதிச் சான்றிதழ்**

ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிட அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இஸ்லாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) இனத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர் 02.05.1988-ம் நாளிட்ட வருவாய்த்துறை அரசாணை எண்.781-ல் குறிபிடப்பட்டுள்ள படிவத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

| வரிசை எண் | சாதியின் பெயர் | சாதி சான்றிதழ் வழங்க தகுதியுடைய அலுவலர் |
|---|---|---|
| 1 | பழங்குடியினர் | வருவாய்க் கோட்ட அலுவலர் / மாவட்ட உதவி ஆட்சியர் / மாவட்ட சார் ஆட்சியர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 2 | ஆதிதிராவிடர் வகுப்பினர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | வட்டாட்சியர் |
| 3 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்த்துறை அலுவலர் அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அல்லது சாதிச் சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத்துணை வட்டாட்சியர் / கூடுதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர் |
| 4 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொட்டிய நாயக்கர் (ராஜ கம்பளம், கொல்லவர், சில்லவர், தொக்களவர், தொழுவ நாயக்கர் மற்றும் எர்ரகொல்லார் உட்பட) | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் |

விண்ணப்பதாரரின் நிரந்தரக் குடியிருப்பு எல்லைக்குட்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரியால் நேரில் கேட்டறிந்த பிறகும் முறையாக ஆய்வு செய்த பிறகும் சாதிச்சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும். 02.05.1988-ம் நாளிட்ட வருவாய்த்துறை அரசாணை எண்.781-ல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அல்லாத சாதிச்சான்றிதழ்களும் உயர்நிலைப்பள்ளியை விட்டுச்சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றுச் சான்றிதழ் அல்லது பள்ளி / கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட சான்றிதழில் குறிக்கப்பட்டுள்ள சாதி, இந்த விதிமுறைகளின் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிட அருந்ததியர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் அல்லது இஸ்லாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) பட்டியலில் சேர்க்கப்படவில்லையென்றால், அவ்விண்ணப்பதாரர்கள் ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட அருந்ததியர் அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் அல்லது இஸ்லாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள் என்று

எச்சரிக்கப்படுகிறார்கள். இந்நிலையில் அவர்கள் ஏனையோர் (Others) என்ற பிரிவின் கீழ் மட்டுமே கருதப்படுவார்கள். மேலும், ஏனையோர் என்ற பிரிவின் கீழ் அவர்கள் கருதப்படுவதற்கு தகுதியற்றவர்கள் என்றால் அவர்களுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**(எ) தடையின்மைச் சான்றிதழ்**

இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் பணியிலுள்ளவர்கள் அல்லது உள்ளாட்சி மன்றங்கள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் ஓரளவு அரசு சார்புள்ள நிறுவனங்களில் வேலையில் நிரந்தர பணியிலாவது அல்லது தற்காலிக பணியிலாவது உள்ளவர்கள், தங்களுடைய விண்ணப்பங்களை தாம் வகித்து வரும் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கு தகுதி பெற்ற அதிகாரிகள் மூலமாகவோ அல்லது துறைத் தலைவர்கள் வாயிலாகவோ அனுப்பத் தேவையில்லை. மாறாக தமது துறைத்தலைவருக்கு தாம் தேர்வாணையத்தின் எந்த தேர்வுக்கு விண்ணப்பிக்கிறார் என்பதை எழுத்து மூலம் தெரிவித்து விண்ணப்பத்தினை நேரடியாக தேர்வாணையத்திற்கு அனுப்பலாம்.

இவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் தமது பதவிக்கு அடுத்த உயர்நிலைக்குக் குறையாத மேலதிகாரியிடமிருந்து “விண்ணப்பத்தை ஏற்க தடையில்லை” என்ற சான்றிதழினை சான்றிதழ் சரிபார்ப்பின் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

<u>துறைத்தலைவர் அல்லது அலுவலகத் தலைவர் அல்லது</u>
<u>பணியமர்த்தும் அலுவலர் அளிக்கும் தடையின்மைச் சான்றிதழ்</u>

1 விண்ணப்பதாரர் பெயர்
2 வகிக்கும் பதவியின் பெயர்
3 விண்ணப்பதாரர் அவசர விதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட தற்காலிகமான பணியாளரா? அல்லது விண்ணப்பதாரர் மாநில அல்லது சார் நிலைப் பணிகளில் தகுதிகாண் பருவத்தினரா?அல்லது தகுதிகாண்பருவம் முடிந்து ஒப்பளிக்கப்பட்டவரா? அல்லது நிலை உறுப்பினரா?
4 பணியாற்றிய காலம் ------------- (நாள்) முதல்---------------- (நாள்) வரை

மேற்குறிப்பு எண்.--------------------------நாள்------------

1 ----------------------- என்ற பதவிக்கான / தேர்வுக்கான இவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் எனக்கு மறுப்பில்லை.
2. திரு/திருமதி/செல்வி-----------------------------------------------க்கு கீழ்க்கண்ட தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன / தண்டனை ஏதும் விதிக்கப்பட்டிருக்கவில்லை என்று சான்றளிக்கப்படுகிறது.
3 அவர் மீது குற்றச்சாட்டுகள்/ குற்ற வழக்குகள் ஏதும் நிலுவையிலில்லை / நிலுவையிலுள்ளது (நிலுவையிலுள்ள இனங்களில் ஆவணங்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்)

| | | |
|---|---|---|
| இடம் | அலுவலக | கையொப்பம் |
| நாள் | முத்திரை | பதவியின் பெயர் |

குறிப்பு

(1) தேர்வாணையத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பிய பிறகும், நேர்காணல் தேர்விற்கு அழைப்பதற்கான / சரிபார்த்தலுக்காக மூலச் சான்றுகளை அனுப்புவதற்கான தகவல் பெறப்பட்டதற்கு முன்புமான இடைப்பட்ட காலத்திற்குள் பணி நியமனம் பெற்ற விண்ணப்பதாரர்களும் தடையின்மைச் சான்றிதழை அனுப்புதல் வேண்டும்.

(2) தடையின்மைச் சான்றிதழை அனுப்பிய பிறகும் பணியமர்த்தப்பட்ட நாளிற்கும் இடைப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பதாரர்கள் மீது குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ அவ்விவரங்களை விண்ணப்பதாரர்கள் தமது பதிவு எண்ணுடன் உடனடியாக தேர்வாணையத்திற்கு தெரிவித்தல் வேண்டும். இதுகுறித்து, விண்ணப்பதாரர்களால் அளிக்கப்பட்ட தகவல்கள், தவறு எனக் கண்டறியப்படும் வேளையில், அவர்களது தெரிவு தேர்வாணையத்தால் இரத்து செய்யப்படும்.

## <u>16. INITIAL PAY, T.A., ETC.,</u>

A selected applicant, who is already in any Government Service (State or Central) on being appointed to another post through the Tamil Nadu Public Service Commission by direct recruitment, will not be entitled on the basis of his previous service to any concession in the matter of initial pay, travelling allowances, etc. An applicant who is in the service of a Government other than the Government of Tamil Nadu if selected and appointed, will not be entitled on the basis of the previous service under that Government to any concession in the matter of leave, transit pay, etc., under the Government of Tamil Nadu.

If a rate of pay actually in force at the time of appointment of selected applicant is different from that announced, he will be paid only at that rate. The pay of the post is also subject to such modification, as may be made from time to time by the State Government.

## <u>16. தொடக்க ஊதியம் / பயணப்படி முதலியவை</u>

நேரடி நியமனத்தின் மூலம் மற்றொரு பணிக்கு நியமிக்கப்படுவதற்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் ஒருவர் ஏற்கனவே (மாநில அல்லது மத்திய) அரசுப்பணி எதனிலும் பணியாற்றுபவராக இருப்பின் முந்தைய பணியின் அடிப்படையில் அடிப்படைச் சம்பளம், பயணப்படி முதலிய எந்தச் சலுகைகளுக்கும் உரிமையற்றவராவார். தமிழ்நாடு அரசு அல்லாத பிற அரசுப் பணியில் உள்ள ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறுவாரானால், அந்த அரசின் கீழமைந்த முந்தைய பணியின் அடிப்படையில், விடுப்பு மற்றும் இடமாற்ற கால ஊதியம் முதலியவற்றிற்கு தமிழ்நாடு அரசின் கீழ் சலுகைகளுக்கு உரிமையற்றவராவார்.

பணிக்கான விளம்பரம் செய்யப்பட்ட காலத்தில் குறிப்பிடப்பட்ட சம்பள விகிதம், நியமனம் பெறுங்காலத்தில் உள்ள சம்பள விகிதத்திற்கு மாறுபட்டு இருக்குமானால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அவர் நியமன கால சம்பள விகிதமே பெறுவார். பதவிக்கான சம்பளம் அவ்வப்போது மாநில அரசால் செய்யப்படும் மாறுதலுக்குட்பட்டதாகும்.

## 17. PROBATION AND TRAINING:

Applicants selected and appointed to a post should undergo such probation and training and should pass such tests as may be prescribed in the rules by the Government from time to time and are liable to face such penalties as prescribed by the Government for failure to pass such tests. At any time before the end of the prescribed period of probation, the probation of an applicant appointed may be terminated and he may be discharged from the service. If within the period of probation, the probationer does not pass the specified tests, if any prescribed for the probationers, or if at the end of said period he is considered not suitable for full membership of the service, he will be discharged from the service

## 17. தகுதிகாண் பருவம் / பயிற்சி

ஒரு பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகாண் பருவம் மற்றும் பயிற்சிகளை முடிப்பதுடன் குறிப்பிட்டுள்ள தேர்வுகளிலும் தேர்ச்சி பெறவேண்டும். அந்தத் தேர்வுகளில் தேர்ச்சி பெறத் தவறினால் அரசு வரையறுக்கும் தண்டனைகளுக்கு உட்பட நேரிடும். நிர்ணயிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்திற்கு முன் எக்காலத்திலும், பணிக்கென நியமிக்கப்பட்ட விண்ணப்பதாரரின் தகுதிகாண் பருவகாலம் இறுதி செய்யப்பட்டு, பணியிலிருந்தும் அவர் நீக்கப்படலாம். பணிக்கான தகுதிகாண் பருவ காலத்திற்குள், தகுதிகாண் பருவத்தினருக்கென ஏதேனும் தேர்வு விதிக்கப்பட்டிருந்து அத்தேர்வில் தகுதிகாண் பருவத்தினர் தேர்ச்சியடையவில்லை என்றாலும், அல்லது மேற்குறிப்பிட்ட தகுதிகாண் பருவ முடிவில் அவர் பணிக்குப் பொருத்தமற்றவர் என்று கருதப்பட்டாலும் பணியிலிருந்து அவர் விலக்கப்படலாம்.

## 18. COMMUNICATION WITH THE TAMILNADU PUBLIC SERVICE COMMISSION:

**i.** Any communication intended to the Commission must be made in writing and addressed only to The Secretary, Tamil Nadu Public Service Commission, No.3, Frazer Bridge Road, V.O.C. Nagar, Chennai -600 003. Any communications addressed to the Chairman and Members of Tamil Nadu Public Service Commission will receive no attention.

**ii.** If a reply is sought it must be accompanied by an envelope affixed with sufficient Postage Stamps with the address to which the reply is to be sent.

**iii.** Communications asking reasons for non-selection and request for exemption from age limit or other qualifications will receive no attention.

**iv.** The Commission will receive communications only from applicants. Communications in the name of pleader or agent on behalf of the applicant will receive no attention.

**v**. Requests for furnishing causes of failure in written exam or for non-selection on the results of the written exam / oral test or for revaluation of answer books will not be entertained.

**vi.** Details of marks of all applicants who appeared for the main written examination and oral test will be available for a period of one year in the Commission's website **www.tnpsc.gov.in** on conclusion of Oral Test.

**vii**. Details of marks of all the other applicants will be made available later in the Commission's website on completion of selection process for a period of one year from the date of publication. Those who ask for details of marks after removal of data from the website should send a demand draft for **Rs.10/-** in favour of the Secretary, Tamil Nadu Public Service Commission.

<u>18. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்துடனான தொடர்பு முறை</u>

(1) தேர்வாணையத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டிய தகவல் அனைத்தும் எழுத்துமூலம், செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண்.3, பிரேசர் பாலச் சாலை, வ.உ.சி.நகர், சென்னை - 600 003-க்கு அனுப்பப்படவேண்டும். தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பெயரில் அனுப்பப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டா.

(2) பதில் ஏதும் தேவைப்பட்டால், போதிய அஞ்சல் வில்லையுடன் கூடிய பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரியிட்ட உறையும், அதனுடன் அனுப்பப்பட வேண்டும்.

(3) தெரிந்தெடுக்கப்படாமைக்கான காரணங்களைக் கேட்டும் வயது வரம்பு அல்லது பிற தகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோரியும் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

(4) விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் முறையீடுகளை மட்டுமே தேர்வாணையம் பெற்றுக் கொள்ளும். ஒரு வழக்குரைஞர் அல்லது பிரதிநிதி பெயர்களில் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

(5) எழுத்துத் தேர்வில் தோல்வியடைந்ததற்கு அல்லது எழுத்துத் தேர்வு அல்லது நேர்முகத் தேர்வின் முடிவில் தேர்ச்சி பெறாததற்குக் காரணங்கள் கேட்டு அல்லது அவர்களுடைய விடைத்தாள்களை மறு மதிப்பீடு செய்யும்படி கேட்டு விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

(6) தேர்வாணையத்தால் நேரடி நியமனத்திற்காக நடத்தப்பெறும் எழுத்துத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகளில் கலந்து கொண்ட அனைத்து விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள், தெரிவுகள் முடிவுற்ற பின்னர் தேர்வாணையத்தின் இணையதளத்தில் (Website:www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டு, ஓராண்டு காலம் வரை வைத்திருக்கப்படும்.

(7) பிற விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்களும் இணையதளத்தில் வெளியிடப்பட்டு ஓராண்டு காலம் பராமரிக்கப்படும். தேர்வாணைய இணையதளத்திலிருந்து மதிப்பெண் குறித்த விவரங்கள் நீக்கப்பட்ட பின்னர், மதிப்பெண் விவரம் பெற விரும்பினால் அதற்கான வேண்டுகோளுடன் ரூ.10/- மதிப்புள்ள வரைவோலையினை இணைத்தனுப்ப வேண்டும். இது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு செலுத்தத்தக்கதாக இருக்க வேண்டும்.

## 19. DISQUALIFICATION / DEBARMENT:

The following acts will end in disqualification or debarment:

**i.**. If an applicant attempts to canvas and bring influence on the Chairman or any of the Member of the Commission personally / by letter / through relatives, friends, patrons, officials or other persons.

**Debarment:**

**a)** If an applicant attempts any tampering, alteration with the documents or certificates, he is liable to be debarred from appearing for any of the selections and examinations conducted by the Commission and consequently from entry into public service itself.

**b)** **(i)** Applicants furnishing false particulars in the matter of qualification medium of instruction or the nature of pass in various subjects, experience gained, their religion or community, disciplinary proceedings, punishment, etc.,

**(ii)** Suppression of material information regarding

(a) Previous appearances or availing free chances, employment in Government or Local Bodies, Public Corporations etc.,

(b) Criminal Cases, Arrests, convictions debarment or disqualification by Union Public Service Commission / State Public Service Commissions.

(c) Participation in agitation or any political organization.

(d) Candidature in election for Parliament / State Legislature / Local bodies etc.,

**(iii)** Making false or vexatious allegations against the Commission in petitions addressed to it or any other authority will be viewed seriously and that the applicant responsible for such act will be debarred from appearing for the examinations and selections held by this Commission permanently or for such period of years as the Commission may decide.

## 19 .தகுதிநீக்கம் / விலக்கிவைத்தல்

**தகுதிநீக்கம்**

(i) தேர்வாணையத்தின் தலைவரிடம் அல்லது ஓர் உறுப்பினரிடம் அவரது ஆதரவைப் பெற நேர்முகமாகவோ கடிதத்தின் மூலமாகவோ அல்லது எவரேனும் ஓர் உறவினர், நண்பர், காப்பாளர், அலுவலர் அல்லது வேறொருவர் மூலமாகவோ செல்வாக்கை செலுத்த முயற்சித்தல் ஆகியவைகள் விண்ணப்பதாரர் அத்தேர்விற்கு தகுதியற்றவராக ஆக்கப்படுவார்.

**விலக்கிவைத்தல்**

**கீழ்க்காணும் நடவடிக்கைகளுக்காக விலக்கி வைக்க நேரிடும்**

(அ) ஆவணங்களிலும், சான்றிதழ்களிலும் காணப்படும் ஏதேனும் திருத்தங்கள் அல்லது மோசடியாக மாறுதல் செய்தல் ஆகியவற்றிற்குக் காரணமாக உள்ள விண்ணப்பதாரர்கள், தேர்வாணையம் நடத்தும் தெரிவுகள் மற்றும் தேர்வுகளில் கலந்து கொள்ளும் உரிமையை இழக்க நேரிடும். மேலும், இதன் விளைவாக அரசுப்பணியில் சேர்வதற்கான உரிமையையே இழக்க நேரலாம்.

(ஆ) (i) விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய பயிற்று மொழிக் கல்வித் தகுதிகள் அல்லது பல்வேறுபட்ட பாடங்களில் பெற்ற தேர்ச்சியின் தன்மை அல்லது அவர்கள் வெவ்வேறு தகுதி நிலைகளில் பெற்ற அனுபவம் அல்லது அவர்களுடைய மதம், சாதி, ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மற்றும் தண்டனைகள் முதலியன பற்றி அவர்களுடைய விண்ணப்பத்தில் தவறான தகவல்களைக் கொடுத்தல்

**(ii) கீழ்க்கண்ட உண்மைகளை மறைத்தல்**

(அ) முன்பு தேர்வாணையத்திற்கு விண்ணப்பம் செய்தது, இலவச அனுமதி சலுகையில் தேர்வு எழுதியது மற்றும் அரசு, உள்ளாட்சி மன்றங்கள் அல்லது அரசுத் துறைக் கழகங்கள் முதலியவற்றில் பணிபுரிந்தது.

(ஆ) கைதானது / குற்றங்களுக்கான தண்டனை பெற்றது, மைய அல்லது மாநில தேர்வாணையத்தால் தேர்வு எழுதும் உரிமை இரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றதாக அறிவிக்கப்பட்டது.

(இ) ஏதேனும் கிளர்ச்சி அல்லது அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டது

(ஈ) மாநில சட்டசபை, நாடாளுமன்றம் அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கு வேட்பாளராகப் போட்டியிட்டது.

(iii) தேர்வாணையத்தின் மீது தவறான அல்லது அவதூறான குற்றச்சாட்டுகளை முறையீடாக தேர்வாணையத்திற்கோ அல்லது வேறு எந்த அதிகாரிக்கோ எழுதுதல் ஆகியவை கடுந்தவறாகக் கருதப்படும். இச்செயல்களுக்குக் காரணமாக உள்ள விண்ணப்பதாரர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் மற்றும் தெரிவுகளில் கலந்து கொள்ளும் உரிமையை நிரந்தரமாக அல்லது தேர்வாணையத்தினால் முடிவு செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இழக்க நேரிடும்.

## 20. OTHER IMPORTANT INSTRUCTIONS:

a) **Applicants should ensure their eligibility for examination.** The applicants applying for the examination should go through all instructions carefully and ensure that they fulfill all eligibility conditions for admission to examination. **Their admission to all stages of the examination will be purely provisional subject to satisfying of the eligibility conditions.** Mere issue of memo of admission to the applicant to written examination / Certificate Verification / Oral Test / Counselling will not imply that his candidature has been fully cleared by the Commission.

b) The Hall Tickets for eligible applicants will be made available in the Commission's Website www.tnpsc.gov.in for downloading by applicants. No Hall Tickets will be sent by post. The applicants must comply with each and every instruction given in the hall ticket.

c) **Facilitation counter for guidance of applicants:** In case of any guidance / information / clarification of their applications, candidature, etc., applicants can contact Tamil Nadu Public Service Commission Office in person or over Telephone No.25332833 / 25332855 in the Commission's Office Toll-Free No.1800 425 1002 on all working days between 10.00 am and 5.45 p.m.

d) If any of their claims is found to be incorrect, they may render themselves liable to disciplinary action by the Commission.

## 20. பிற முக்கிய அறிவுரைகள்

அ)விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு தேர்வுக்கும் விண்ணப்பிப்பதற்கு முன் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை முழுமையாகப் படித்து தெரிந்து கொண்டு விண்ணப்பிக்க வேண்டும். தங்களின் தகுதித்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாணை அனுப்பப்பட்டதனாலோ அல்லது எழுத்துத்தேர்வு/சான்றிதழ் சரிபார்ப்பு / நேர்முகத்தேர்வு/ கலந்தாய்வு ஆகியவற்றிற்கு அனுமதிக்கப்பட்டதனாலோ, அவருடைய விண்ணப்பம் இறுதியாக ஏற்கப்பட்டதாகக் கருதப்படாது. விண்ணப்பங்கள் எல்லா நிலைகளிலும் தற்காலிகமாகவே அனுமதிக்கப்படும்.

ஆ) தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு, தேர்வு எழுதுவதற்கான நுழைவுச் சீட்டுகள் தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். நுழைவுச் சீட்டில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை கடைப்பிடித்து தேர்வு எழுத வேண்டும். நுழைவுச்சீட்டு தனியாக அஞ்சல் மூலம் அனுப்பப்படமாட்டாது.

இ) விண்ணப்பம் சமர்ப்பித்தல் மற்றும் தேர்வுக்கான நுழைவுச்சீட்டுப் பெறுதல் தொடர்பாக எழும் ஐயங்களுக்கும் மற்றும் பொதுவான தகவல்களைப் பெறுவதற்கும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தை நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (25332833 25332855) அல்லது கட்டணமில்லா தொலைபேசி எண். 1800-425-1002 என்ற எண்ணிலோ, வேலை நாட்களில் 10 மணி முதல் 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

(ஈ) விண்ணப்பதாரர் தவறான தகவல் அளித்ததாகத் தெரியவந்தால் ஒழுங்குநடவடிக்கைக்கு ஆட்படுவர்.

## 21. HELP OF SCRIBES:

In objective type / Descriptive type papers, the applicant must make the responses himself. In no circumstances, he will be allowed the help of any other person to make responses for him **except** in the case of applicants who are visually impaired / Differently Abled persons who are unable to use their hands for writings.

### (a) Visually Impaired:

A visually impaired applicant will be allowed the assistance of Scribe, subject to the following conditions:-

i. Visually impaired applicant who applies with reference to any of the Commission's notifications should produce a medical certificate from a Government Medical Officer to the effect that he is totally blind and not in a position to write the examination on his own.

ii. The Commission will arrange for the competent and qualified Scribes and will also pay for them.

iii. The visually impaired applicant will be seated in a separate room under the direct supervision of the Chief Invigilator. They will be granted half an hour extra time for writing the examination.

iv. At the closure of the examination, the scribe will read what has been written in the answer books so as to enable the visually impaired applicant to ensure that the scribe has written what he had dictated. A declaration to this effect should be given in writing by the visually impaired applicant for reference of the Commission.

**Note:** Failure to comply with instruction (i) above will entail rejection of the application.

**b) Orthopedically Challenged**

Differently Abled persons, particularly hands, are allowed the assistance of a competent and qualified scribe subject to the following Conditions;

i. All the Differently Abled persons, particularly hands, will be allowed to take the Commission's examinations with the help of the scribes.

ii. The Commission will arrange for the competent and qualified scribe and the amount paid to the scribes will be met by the Commission and Differently Abled persons need not pay any amount to them.

iii. The scribes should possess the same or equivalent qualification as possessed by the diffierently abled persons, particularly hands.

iv. Scribes will not be appointed on regular basis as full time Government servants.

v. All such Differently Abled applicants appearing for the written examination will be seated in a separate room under the direct supervision of the Chief Invigilators.

vi. The Differently Abled persons, who are unable to write with either arms and are provided with scribes assistance, will be granted extra half-an-hour time for writing examinations conducted by the Commission.

**Note**: All Differently Abled persons, who are unable to climb the staircase, will be allowed to write the examination in the Ground Floor along with the other applicants.

**21. பதிலி எழுத்தரின் உதவி (Help of Scribe)**

பார்வையற்ற விண்ணப்பதாரர் / மாற்றுத்திறனாளிகள் (குறிப்பாகக் கைகள் ஊனமுற்றவர்) தவிர ஏனைய விண்ணப்பதாரர்கள் கொள்குறி வகை வினாத்தாள்களுக்கு (Objective Type Question Papers) விடையளிக்கும் போதும், விவரிக்கும் வகை வினாத்தாள்களுக்கு (Descriptive Question Papers) விடையளிக்கும்போதும் அவரவரே விடைகளைக் குறிக்கவேண்டும் / எழுத வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் அவர் ஓர் உதவியாளரின் (Scribe) உதவியோடு தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்.

(அ) <u>பார்வையற்ற விண்ணப்பதாரர்</u>

பார்வையற்ற விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு உதவியாளருடன் (Scribe) தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்.

i. தேர்வாணையத்தின் அறிவிக்கைகளின்படி, பார்வையற்ற விண்ணப்பதாரர் ஒருவர், பணிக்காக விண்ணப்பிக்கும் போது அரசு மருத்துவ அலுவலரிடம் “இவர் முழுமையாகப் பார்வையற்றவர், இவரால் சுயமாக தேர்வு எழுத இயலாது” என்ற சான்றிதழ் பெற்று தேர்வாணையத்திற்கு அளிக்க வேண்டும்.

ii. உதவியாளர்களை (Scribe) தேர்வாணையமே நியமித்து அவர்களுக்கு ஊதியமும் தேர்வாணையத்தாலேயே வழங்கப்படும்.

iii. பார்வையற்ற விண்ணப்பதாரர்கள் தலைமைக் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் தனியான அறையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அவர்கள் தேர்வு எழுதுவதற்கு அரை மணி நேரம் கூடுதலாக வழங்கப்படும்

iv. பார்வையற்ற விண்ணப்பதாரர், தாம் வாய்மொழியாகக் கூறியதைத்தான் உதவியாளர் விடைத்தாள்களில் எழுதியுள்ளார் என்பதைப் பார்வையற்ற விண்ணப்பதாரர் உறுதி செய்ய, தன்னால் இதுவரை விடைத்தாள்களில் எழுதப்பட்டுள்ளதைப் பார்வையற்ற விண்ணப்பதாரருக்குத் தேர்வு முடிந்ததும் உதவியாளர் படித்துக் காட்டவேண்டும். பார்வையற்ற விண்ணப்பதாரர் இதற்கான உறுதிமொழி சான்றிதழை எழுத்து மூலமாக தேர்வாணையத்திற்கு வழங்க வேண்டும்

<u>குறிப்பு</u>

மேலே கூறப்பட்டுள்ள அறிவுரை (1)-இன் படி இல்லாத எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

**(ஆ) மாற்றுத்திறனாளிகள் குறிப்பாக கைகள் ஊனமுற்றவர்கள்**

தேர்வாணையத்தால் நடத்தப்படும் பலதரப்பட்ட போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் போது கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவியாளர் (Scribe) உதவியுடன் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

i. உடலால் இயலாத குறிப்பாக கைகள் இயலாத, எல்லா விண்ணப்பதாரர்களும் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுக்கு உதவியாளர்கள் உதவியுடன் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

ii. உதவியாளர்களை (Scribe) தேர்வாணையமே நியமித்து அவர்களுக்கு உரிய தொகை தேர்வாணையத்தால் வழங்கப்படும். எனவே, உடலால் இயலாத விண்ணப்பதாரர்கள் உதவியாளர்களுக்கென தனியே எந்தத் தொகையும் செலுத்தத் தேவையில்லை.

iii. உடலால் இயலாதவர்களுக்கு (குறிப்பாக கைகள் இயலாமை) உதவியாளர்களாக வருபவர்கள் உடலால் இயலாதவர்கள் பெற்றிருக்கும் அதே கல்வித் தகுதியையோ, அதற்கு ஈடாக கல்வித் தகுதியையோ பெற்றிருத்தல் வேண்டும்

iv. உதவியாளர்கள் (Scribe) நிரந்தரப் பணியின் அடிப்படையில் (Regular Basis) முழு நேர அரசு ஊழியர்களாக நியமிக்கப்படமாட்டார்கள்

v. தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படும் உடலால் இயலாத அனைத்து விண்ணப்பதாரர்களும் தலைமைக் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் தனியான அறையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்

vi. தனது எந்தக் கையினாலும் எழுத இயலாத மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களுக்கு தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளை உதவியாளரின் (Scribe) உதவியுடன் எழுத, அரைமணி நேரம் கூடுதலாக அளிக்கப்படும்.

<u>குறிப்பு:-</u>
மாடி ஏற இயலாத மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் பிற விண்ணப்பதாரர்களுடன் சேர்ந்து கீழ்த்தளத்திலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.

## 22. INSTRUCTIONS TO APPLICANTS TO BE FOLLOWED WHILE APPEARING FOR COMPETITIVE EXAMINATIONS (OBJECTIVE TYPE AND DESCRIPTIVE TYPE) CONDUCTED BY THE COMMISSION.

## தேர்வாணையம் நடத்தும் பல்வேறு நியமனங்களுக்கான போட்டித் தேர்வுகள் (கொள்குறிவகைத் தேர்வுகள் மற்றும் விரிந்துரைக்கும் வகைத் தேர்வுகள்) எழுதும் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்.

### <u>I- General Instructions (பொதுவான விதிமுறைகள்) :-</u>

**1.** Applicants have to be decently dressed and should reach the Examination hall 30 minutes before the commencement of Examination with the downloaded hall tickets from the Commission’s website. On any account, **no applicant will be allowed after 30 minutes** of the commencement of examination**.**

விண்ணப்பதாரர்கள், தேர்வாணைய வலைதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட அனுமதிக் குறிப்பாணையுடன் 30 நிமிடத்திற்கு முன்பாகவே குறிப்பிட்டுள்ள தேர்வு மையத்திற்கு நல்ல முறையில் உடையணிந்து வர வேண்டும். மேலும், எக்காரணத்தைக் கொண்டும் தேர்வு தொடங்கிய **30 நிமிடத்திற்குப் பின்** தேர்வுக் கூடத்திற்கு வரும் விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத **அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

2.Applicants who have applied more than once and consequently are in receipt of more than one Hall Ticket with different register numbers should retain only one Hall Ticket and return the remaining Hall Ticket(s) to the Commission specifying the facts.

ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்து, அதன் விளைவாக ஒன்றுக்கு மேற்பட்ட வெவ்வேறு பதிவெண்களைக் கொண்ட அனுமதிக் குறிப்பாணைகள் கிடைக்கப் பெற்ற விண்ணப்பதாரர்கள் ஒரே ஒரு அனுமதிக் குறிப்பாணையை மட்டும் தம்மிடம் வைத்துக் கொண்டு

இவ்விவரத்தைத் தெரிவித்து மற்றவற்றைத் தேர்வாணையத்திற்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

3.Applicants suffering from any contagious disease will not be admitted into the examination hall.

தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கூடத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

4.Applicants have to appear for the examination in the venue where they have been allotted to (as mentioned in the Hall Ticket). Change of Venue will not be permitted. If any applicant appears for the examination in the venues other than where he was originally allotted to, his answer paper will be **invalidated**.

விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் அனுமதிக்குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ளபடி மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர், தேர்வு மையத்தை மாற்ற முடியாது. விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்திற்குப் பதிலாக வேறொரு தேர்வு மையத்தில் தேர்வை எழுதினால் அவ்விண்ணப்பதாரர்களின் விடைத்தாள் **செல்லாததாக்கப்படும்**.

5. Applicants should show the Hall ticket to the Invigilator / Chief Invigilator / Inspection authorities of the examination hall, on demand for verification.

விண்ணப்பதாரர்கள் தேர்வு கூடத்தில் அறை கண்காணிப்பாளர் / தலைமைக் கண்காணிப்பாளர் / ஆய்வு அலுவலர்கள் அனுமதிக் குறிப்பாணையை பரிசீலனைக்காகக் கேட்கும் பொழுது அவர்களிடம் காண்பிக்க வேண்டும்.

6.Applicants should maintain strict discipline not only in the examination hall, but also inside the campus of the examination venue. Applicants found <u>Smoking or in a drunken mood</u>, or found to have entered into quarrel of any kind, or misbehaved with the Chief Invigilator or with the Inspection Authorities or with the Invigilator or with any other applicant who has come to write the examination, either in the Examination venue or inside the campus of the examination, either before or during or after the examination, are liable for severe action including appropriate criminal action.

தேர்வுக் கூடத்தில் மட்டுமின்றி தேர்வுமைய வளாகத்திலும் விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். மது அருந்திவிட்டு வரும் விண்ணப்பதாரர்கள், தேர்வுக் கூடத்தில் புகைப்பிடிக்கும் விண்ணப்பதாரர்கள், சண்டையிடும் விண்ணப்பதாரர்கள் மற்றும் தேர்வுக்கூட கண்காணிப்பாளர் / முதன்மைக் கண்காணிப்பாளர் அல்லது தேர்வு எழுத வரும் விண்ணப்பதாரர்களுடன் தேர்வுக்கூடத்திலோ அல்லது தேர்வு மைய வளாகத்திலோ தேர்வு நடைபெறுவதற்கு முன்னரோ, பின்னரோ அல்லது தேர்வு நடைபெறும் பொழுதோ முறை தவறி நடக்கும் விண்ணப்பதாரர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். மேலும், அவ்விண்ணப்பதாரர்கள் மீது தகுந்த குற்றவியல் தண்டனை நடவடிக்கையும் எடுக்கப்படும்.

7.Tea, Coffee, snacks, soft drinks etc., will not be allowed inside the examination venue.

தேர்வுக் கூடத்திற்கு உள்ளே தேநீர், காபி, சிற்றுண்டி மற்றும் குளிர்பானங்கள் போன்றவை அனுமதிக்கப்படமாட்டாது.

8. Applicants should always sit in the seat allotted to them as per their Register Number and must not change it. They should get the instructions from the Invigilators regarding filling up of answer sheets. Before filling up the details they should check the answer sheets / answer books as to whether it is printed properly, not damaged and has a number assigned on it.

If Answer Sheet / Answer Book are defective in any way, they should ask the Invigilator to replace it before filling up the applicants particulars. Once commenced writing, no answer sheet /answer book will be replaced.

விண்ணப்பதாரர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட, பதிவு எண் எழுதப்பட்ட இருக்கையில் மட்டுமே அமர வேண்டும். இடம் மாறி அமரக் கூடாது. அறைக் கண்காணிப்பாளரின் அறிவுரையின்படி விடைத்தாள் /விடைப் புத்தகத்தை நிரப்ப வேண்டும். நிரப்புவதற்கு முன் விடைத்தாள் / விடைப் புத்தகம் சரியாக அச்சடிக்கப்பட்டுள்ளதா, பழுதின்றியுள்ளதா மற்றும் அதற்கு ஓர் எண் இடப்பட்டுள்ளதா என்பதையும் சரிபார்க்கவும்.

விடைத்தாள் / விடைப் புத்தகம் எந்த வகையிலேனும் குறைபாடுடையதாக இருந்தால் அதனை உடனடியாக மாற்றிக் கொடுக்கும்படி தேர்வு எழுதத் தொடங்குவதற்கு முன்பு அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். தேர்வு எழுதத் தொடங்கிய பின்பு விடைத்தாள் / விடைப் புத்தகம் மாற்றித் தரப்படமாட்டாது.

9. The applicant will be supplied with Question Booklet 10 minutes before commencement of the Examination.

Before writing and shading the Question Booklet Series number in the OMR Answer Sheet, applicant should ensure that all the questions are there in Series without any omission and there are no blank pages in Question Booklet. In case if any defect is found it shall be reported to the Invigilator immediately and get it replaced with a complete Question Booklet. Correct Booklet Series number which is used by the applicant should be written in OMR Answer Sheet. If any defect is noticed in the Question Booklet or OMR sheet after the commencement of the Examination, it will not be replaced.

தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக விண்ணப்பதாரர்களுக்கு வினாத்தாள் வழங்கப்படும்.

OMR விடைத்தாளில், வினாத்தாள் வரிசை எண்ணை எழுதுவதற்கு மற்றும் அதற்கான கட்டங்களை நிரப்புவதற்கு முன், வினாத்தாளுக்குரிய வரிசை எண் இடப்பட்டுள்ளதா, அது சரிவர அச்சடிக்கப்பட்டுள்ளதா, பழுதின்றி உள்ளதா, வினா எண் வரிசை, வினாக்கள் சரிவர அச்சிடப்பட்டுள்ளதா, பக்கங்கள் ஏதேனும் காலியாக உள்ளதா, என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாள் எவ்வகையிலேனும் குறைபாடுடையதாக இருந்தால், உடனடியாக கண்காணிப்பாளரிடம் திருப்பியளித்து விட்டு, சரியாக உள்ள வேறொரு வினாத்தாளை

பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு முறையிட்டால், வினாத்தாள் / OMR விடைத்தாள் மாற்றித் தரப்படமாட்டாது.

10. Applicant should carry Pen (Blue or Black) and Hall Ticket **only** inside the examination venue. Other materials are not allowed. Applicants found in possession of any materials such as Notes, Pencils, Books, Guides, Electronic gadgets of any kind etc., **inside the examination hall** will be liable for rejection of application and debarment of the applicant for a period, as decided by the Commission.

விண்ணப்பதாரர்கள் தேர்வு மையத்திற்கு அனுமதிக் குறிப்பாணை மற்றும் நீலம் அல்லது கருப்பு மை பேனா **மட்டுமே** எடுத்துவர அனுமதிக்கப்படுவர். மற்றப்பொருட்களுக்கு அனுமதி இல்லை. எந்தவொரு குறிப்புகள், பென்சில், புத்தகம், வழிகாட்டி புத்தகம், மின்னணு சாதனங்கள்; (Electronic gadgets) போன்ற எவற்றையும் விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கூடத்திற்குள் கண்டிப்பாக எடுத்து வரக்கூடாது. மேற்கூறியவற்றில் ஏதேனும் விண்ணப்பதாரர்கள் **தேர்வறைக்குள் வைத்திருந்தால்** அவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். மேலும், தேர்வாணையத்தால் தக்கதெனக் கருதப்படும் காலம் வரையில் அவ்விண்ணப்பதாரர்கள், தேர்வாணையத்தால் எதிர்வரும் காலங்களில் நடத்தபடும் தேர்வுகளில் கலந்துகொள்வதற்கு தகுதியற்றவராக்கப்படுவார்கள்.

11. Borrowing of any material, instruments from other applicants is strictly prohibited. They shall use only their own pen and specifically permitted material.

விண்ணப்பதாரர்கள் மற்றவர்களிடமிருந்து எந்தப் பொருளையும் வாங்க தடைசெய்யப்பட்டுள்ளது. தேர்வுக்கு, குறிப்பாக அனுமதிக்கப்பட்ட பேனா மற்றும் பொருட்களை தாங்களே கொண்டு வந்து உபயோகிக்க வேண்டும்.

12. Applicants should shade the answer field of OMR answer sheet completely as per the correct method specified in the first page of the OMR answer sheet.

OMR விடைத்தாளில், முதல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள சரியான முறைப்படி, தேர்ந்தெடுத்த விடைக்கான கட்டத்தை முழுவதுமாக நிரப்பவும்.

13. Applicant involving in any indiscipline or irregular practices like consulting with other applicants, copying, carrying notes, seeking the help of an Invigilator / any outsider, etc., are strictly prohibited. Any violation would lead to being sent out of the Examination Hall and his Answer sheet will be invalidated and being debarred from the present and future examinations.

விண்ணப்பதாரர் தேர்வுக்கூடத்தில் ஏதாவது ஒழுங்கீனச் செயலில் ஈடுபடுதல் அதாவது மற்ற விண்ணப்பதாரர்களுடன் கலந்தாலோசிப்பது, மற்றவர்களின் விடைத்தாளைப் பார்த்து எழுதுவது, குறிப்புகள் கொண்டுவருவது, தேர்வுக்கூட கண்காணிப்பாளர் அல்லது மற்றவர்கள் உதவியை நாடுவது போன்றவை தடை செய்யப்படுகின்றன. இந்த அறிவுரையை மீறுவோர் தேர்வுக் கூடத்தைவிட்டு வெளியேற்றப்படுவது மட்டுமல்லாமல் அவர்களது விடைத்தாட்கள்

செல்லாததாக்கப்படும். மேலும் அந்தத் தேர்வு மற்றும் எதிர்வரும் காலங்களில் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்துகொள்வதற்கும் தகுதியற்றவராக்கப்படுவர்.

14. An applicant admitted to the Written Examination provisionally based on the information furnished by him in the on-line application. If at any stage, the information furnished by him is found to be incorrect and does not conform to the provisions announced in the Commission's Notification, Instructions to the applicants and other Rules of the Commission in this regard his application will be summarily rejected and provisional selection if any made will also be cancelled. Mere admission to the examination will not confer any right on the candidature. His candidature shall be provisional at all stages and the Commission has the right to reject it at any stage as per the rules and the procedures of the Commission.

விண்ணப்பதாரர் தனது இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் தற்காலிகமாகத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அவ்விவரங்கள், தகவல்கள் தவறானதாக மற்றும் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள விதிகள், விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள், தேர்வாணைய பிற விதிகளுக்கு முரணாக இருப்பது பின்னர் தெரியவந்தால், எந்தவொரு நிலையிலும் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் மற்றும் தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பினும் அத்தெரிவு இரத்து செய்யப்படும். தேர்விற்கு அனுமதிக்கப்படுவதால் மட்டுமே, விண்ணப்பதாரர் எந்தவொரு பதவிக்கான தெரிவிற்கும் உரிமை கோர இயலாது. எல்லா நிலைகளிலும் தேர்வுக்கான அனுமதி தற்காலிகமானதாகும். எந்நிலையிலும் தேர்வாணையத்தின் விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி விண்ணப்பத்தை நிராகரிக்க தேர்வாணையத்திற்கு உரிமை உள்ளது.

15. On any account, no applicant will be allowed to exceed the time allotted for answering the paper.

தேர்வு எழுத, அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு மேல், எக்காரணத்தைக் கொண்டும் அதிகப்படியான நேரம் எடுத்துக்கொள்ள விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

16. On any account, no applicant will be allowed to leave the Examination hall before the closing time of the examination.

தேர்வுக்குரிய நேரம் முடிவதற்கு முன்பாக, தேர்வுக் கூடத்தை விட்டுச் செல்ல எந்தவொரு விண்ணப்பதாரரும் அனுமதிக்கப்படமாட்டார்.

17. At the end of the session, Answer Sheet / Answer Book should be returned to the Invigilator. Applicants are prohibited from taking with them from the examination hall any used / unused answer sheet / answer book supplied to them.

தேர்வுக்குரிய நேரம் முடிந்தவுடன், விண்ணப்பதாரர் அவரது விடைத்தாளை தேர்வுக்கூடக் கண்காணிப்பாளரிடம் கண்டிப்பாக திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். பயன்படுத்திய மற்றும் பயன்படுத்தப்படாத விடைத்தாளை / விடைப் புத்தகத்தை தேர்வுக்கூடத்தை விட்டு வெளியே எடுத்துச்செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

18. Applicants are allowed to take the Question Booklet only after the Examination is over.

தேர்வு முடிந்தவுடன், விண்ணப்பதாரர்கள் அவர்களது வினாத்தாளை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

19. Any representation regarding the defects in question paper should be sent to the Controller of Examinations within two days from the date of examination specifying the Serial Number of the Question Booklet along with the Photostat copy of the question paper. In such representations, Register No. Name and address of the applicant, Question No. etc. should invariably be quoted. Any representation received after two days from the date of examination or without any of the required particulars will receive no attention.

வினாத்தாள் குறைபாடு தொடர்பாக முறையீடு செய்யவேண்டுமானால் தேர்வு முடிந்த நாளிலிருந்து இரண்டு நாட்களுக்குள் விண்ணப்பதாரரின் பதிவெண், பெயர், முகவரி, கேள்வி எண், வினாத்தாள் வரிசை எண் போன்றவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு வினாத்தாள் நகலுடன் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலருக்கு முறையீடு செய்யவேண்டும். இந்த விவரங்கள் இல்லாததும் இரண்டு நாட்களுக்குப் பின்னர் பெறப்படுவதுமான எந்தவொரு முறையீட்டின் மீதும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

20. Requests from applicants for furnishing of their marks or answer paper copy before the completion of the entire selection process, will not be entertained by the Commission.

ஒரு பதவிக்கான தெரிவுப் பணிகள் முற்றிலுமாக முடியும் முன்னர், தங்களது மதிப்பெண் அல்லது விடைத்தாள் நகல் அளிக்குமாறு கோரும் விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**<u>II Objective Type Examination – OMR Method (கொள்குறிவகைத் தேர்வு முறை):</u>**

After the applicant has taken his allotted seat in the Examination Hall he will be supplied with the OMR Answer Sheet by the Invigilator after duly obtaining necessary acknowledgement from the applicant in the computerized Attendance sheet. The applicant should verify his name and Register Number properly and then write the OMR Answer Sheet Number in the Attendance sheet against the subject concerned and affix his signature.

விண்ணப்பதாரர்கள், தேர்வுக் கூடத்தில் அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்த பின்பு, வருகைப் பெயர்ப்பட்டியலில் (Computerised Attendance Sheet) அவரது ஒப்புகையைப் பெற்றுக்கொண்டு, ஒரு OMR விடைத்தாள் தேர்வுக்கூட கண்காணிப்பாளரால் வழங்கப்படும்.

வருகைப்பதிவேட்டில் உள்ள தன் பெயர், பதிவெண் ஆகியவற்றை சரிபார்த்துக் கொண்டு தனக்குத் தரப்பட்டிருக்கும் OMR விடைத்தாளின் எண்ணை அவர் அப்போது எழுதப்போகும் தேர்வுத்தாளுக்கான வருகைப்பதிவேட்டில் தன்னுடைய பெயருக்கு எதிரே எழுதி தன் கையொப்பத்தையும் இட வேண்டும்.

**Penalty for violation of Commission's instructions in the objective type examination**

The answer sheets of the applicants will be invalidated / deduction of marks / criminal action and debarment for the following violations.

**கொள்குறி வகைத் தேர்வுகளில் அறிவுரையை மீறுவோருக்கான தண்டனைகள்**

கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்காக விண்ணப்பதாரர்களின் விடைத்தாள்கள் செல்லாததாக்கப்படும் / மதிப்பெண் குறைக்கப்படும் / குற்றவியல் நடவடிக்கை மற்றும் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைத்தல் போன்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**1) Invalidation of Answer Sheet (விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல்)**

i. Usage of inks other than Blue or Black ball pen
நீலம் அல்லது கருமை நிற மை கொண்ட பந்து முனைப் பேனாவைத் (Ball Point Pen) தவிர வேறு நிற மை கொண்ட பேனாவை உபயோகப்படுத்துவது

ii. Usage of pencil
பென்சில் கொண்டு விடைகள் நிரப்பப்படுவது

iii. Answered in a subject other than the one opted in the application / specified in the hall-ticket.

விண்ணப்பதாரர்கள் அவர்களின் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது அவருடைய அனுமதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பப்பாடத்தில் தேர்வு எழுதாமல் வேறு பாடத்தில் மாற்றித் தேர்வு எழுதுவது

iv. Possession of electronics devices such as cellular phone, watches and Ring with inbuilt memory notes, etc., or any other electronic device and non-electronic devices such as P & G Design Data Book, Books, Notes, Handbags etc.,
அலைபேசி (செல்லுலார் போன்) நினைவூட்டு உள்கட்டமைப்பு குறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரம் மற்றும் மோதிரம் போன்ற எந்தவொரு மின்னணு சாதனங்கள் அல்லது வேறு வகை மின்னணு சாதனங்கள் மற்றும் P & G Design Data Book, புத்தகம், குறிப்புகள், கைப்பைகள் ஆகியவற்றை விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கூடத்திற்குள் வைத்திருப்பது

v. The answer sheet will be invalidated if the box for Question Booklet series is not shaded or incorrectly shaded and could not be identified even by physical verification of the answer sheet.

வினாத்தாள் வரிசைக்கான கட்டம் நிரப்பப்படாமல் விடப்பட்டிருந்தாலும் அல்லது தவறாக நிரப்பப்பட்டிருந்தாலும், எந்த எண் கொண்ட வினாத்தாளைப் பயன்படுத்தினார் என்பதை விடைத்தாளின் நேரடி ஆய்வின் மூலம் கண்டறிய இயலாத விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.

**2) <u>Deduction of marks (மதிப்பெண் குறைத்தல்)</u>**

I. Failure to bring the Hall Ticket to the examination hall will lead to reduction of two marks or invalidation of answer sheet as the case may be, as it may deem fit by the Commission on the merit of each such case.

தேர்வுக்கூட அனுமதிச்சீட்டை தேர்வுக்கூடத்திற்கு எடுத்துச் செல்லத் தவறுவது இரண்டு மதிப்பெண் குறைத்தல் அல்லது விடைத்தாளை செல்லாததாக்குதல் போன்றவற்றிற்கு வழிகோலும். அவ்வாறான ஒவ்வொரு நேர்விலும் தேர்வாணையம், தகுதியின் அடிப்படையில் எது சரியெனப்படுகிறதோ அவ்வாறே முடிவெடுக்கும்.

**II.** Two marks will be deducted for incorrect shading or absence of shading the Register Number**.**

பதிவு எண் வரிசைக்கான கட்டம் தவறாக நிரப்பப்பட்டிருந்தாலோ / நிரப்பப்படாமல் விடுபட்டிருந்தாலோ இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

**III.** Two marks will be deducted for incorrect shading or absence of shading of Question Booklet Number.

வினாத்தாள் வரிசைக்கான கட்டம் தவறாக நிரப்பப்பட்டிருந்தாலோ / நிரப்பப்படாமல் விடுபட்டிருந்தாலோ இரண்டு மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

**3) <u>Criminal action (குற்றவியல் நடவடிக்கை)</u>**

Misbehavior and indiscipline in the examination hall. (Refer para 22(6) of General Instructions)

தேர்வு மையத்தில் தவறான நடத்தை மற்றும் ஒழுங்கீன செயல்களுக்கு குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும். (பொது அறிவுரைகள் பத்தி 22(6) ஐ பார்க்கவும்)

**4) <u>Debarment (தகுதியற்றவராக்குதல்)</u>**

Applicants resorting to any kind or irregularity or mal-practices in the examination hall such as:-

விண்ணப்பதாரர்கள் தேர்வு மையத்தில் செய்யும் விரும்பத்தகாத செயல்கள் அல்லது ஒழுங்கீன செயல்கள் அல்லது தீய நடவடிக்கைகள் அதாவது:-

1. Copying from another applicant in the examination hall
   தேர்வு கூடத்தில் மற்றவர்களைப் பார்த்து எழுதுவது

2. Permitting others to copy from his answer sheet
   தன்னுடைய விடைத்தாளைப் பார்த்து எழுத மற்றவர்களை அனுமதித்தல்

3. Copying from books or notes which are Printed /Typewritten / hand written will also lead to debarment of the applicants for such a period as the Commission may decide.
   புத்தகம் அல்லது அச்சிடப்பட்ட / தட்டச்சு செய்யப்பட்ட / மற்றும் கையால் எழுதப்பட்ட குறிப்புகள் ஆகியவற்றை பார்த்து எழுதினால் தேர்வாணையம் எது தக்கது என்று கருதுகிறதோ அந்த கால அளவுக்கு தகுதியற்றவராக்கப்படலாம்.

4. Seeking the help/assistance of any official / hall supervisor in answering question in examination hall.
   தேர்வுக் கூடத்தில் விண்ணப்பதாரர்கள் வினாவிற்கான விடை தொடர்பாக அறை கண்காணிப்பாளரையோ அல்லது வேறு அலுவலரின் உதவியையோ நாடுதல்.

5. Possession of electronics devices such as cellular phone, watches and Ring with inbuilt memory notes, etc., or any other electronic device and non-electronic devices such as P & G Design Data Book, Books, Notes, Handbags etc.,

   அலைபேசி (செல்லுலார் போன்) நினைவூட்டு உள்கட்டமைப்பு குறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரம் மற்றும் மோதிரம் போன்ற எந்தவொரு மின்னணு சாதனங்கள் அல்லது வேறு வகை மின்னணு சாதனங்கள் மற்றும் P & G Design Data Book, புத்தகம், குறிப்புகள், கைப்பைகள் ஆகியவற்றை விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கூடத்திற்குள் வைத்திருப்பது

**<u>III) Descriptive Type Examination (விரிந்துரைக்கும் வகைத் தேர்வு)</u>**

After the applicant has taken his allotted seat in the Examination Hall he will be supplied with the cover containing question paper and Answer Book by the Invigilator after duly obtaining necessary acknowledgement from the applicant in the computerized attendance sheet. The applicant should verify his name and Register Number properly and then write the Answer Book Number in the Attendance sheet against the subject concerned and record his signature.

விண்ணப்பதாரர் தேர்வுக் கூடத்தில் அவருக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்த பின்பு வருகைப் பெயர்ப்பட்டியலில் (Computerised Attendance Sheet) அவரது ஒப்புகையைப் பெற்றுக்கொண்டு ஒரு விடைத்தாள் மற்றும் வினாத்தாள் அடங்கிய உறை விண்ணப்பதாரருக்கு அறைக் கண்காணிப்பாளரால் வழங்கப்படும். வருகைப் பெயர்ப்பட்டியலில் உள்ள தன் பெயர், பதிவெண் ஆகியவற்றை சரிபார்த்துக் கொண்டு தனக்குத் தரப்பட்டிருக்கும் விடைத்தாள் புத்தகத்தின் எண்ணை விண்ணப்பதாரர் அப்போது எழுதப்போகும் தேர்வுத்தாளுக்கான வருகைப் பெயர்ப்பட்டியலில் தன்னுடைய பெயருக்கு எதிரே எழுதி தன் கையொப்பத்தையும் இட வேண்டும்.

**<u>Penalty for violation of Commission's instruction in the descriptive type examination</u>**

The answer books of the applicants will be invalidated / marks deducted / debarred for violations of any one or more of the instructions, besides initiating criminal action wherever necessary .

**<u>விரிந்துரைக்கும் வகைத் தேர்வில் தேர்வாணைய விதிமுறைகள் மீறலுக்கான தண்டனை.</u>**

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விதிமுறைகளை மீறும் விண்ணப்பதாரர்களின் விடைத்தாள் செல்லாததாக்கப்படுதல் / மதிப்பெண் குறைத்தல் மற்றும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படுதல்.

**1) <u>Invalidation (செல்லாததாக்கப்படுதல்)</u>**

I. Usage of ink other than Blue or Black (Fountain pen or Ball pen or Gel ink). Applicant should use only any one of the two colours. If the applicant uses blue ink he / she should use the same blue ink in the entire answer book for all purposes including answering, drawing, underlining, highlighting etc., Likewise if the applicant uses black ink he should use the same black ink in the entire answer book for all purposes. He should not use both blue and black ink in an answer paper. For this purpose applicants should keep sufficient number of additional pens of same type pens with same colour ink and same shade.

நீலம் அல்லது கருமை நிற மை கொண்ட பேனா அல்லாமல், வேறு நிற பேனாக்கள் உபயோகித்தல். விண்ணப்பதாரர்கள் நீலம் அல்லது கருமை நிற மை கொண்ட பேனா மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும்(மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா). விண்ணப்பதாரர்கள் மேற்சொன்ன இரண்டு நிற மையுடைய பேனாக்களில் ஏதாவது ஒரு நிற (நீலம் அல்லது கருமை) மை கொண்ட பேனாவை மட்டும் உபயோகப்படுத்த வேண்டும். விண்ணப்பதாரர் நீல நிற மை பேனாவை உபயோகித்தால் அவர் விடைத்தாட்கள் முழுவதும் அதாவது விடை எழுதுதல், படம் வரைதல், அடிக்கோடிடுதல், மேற்கோள்காட்டுதல் போன்றவற்றுக்கு அதே நீல நிற மை பேனாவை மட்டுமே உபயோகிக்க வேண்டும். அதேபோல் விண்ணப்பதாரர் கருப்பு நிற மை பேனாவை உபயோகித்தால் அவர் விடைத்தாட்கள் முழுவதும் அதாவது விடை எழுதுதல், படம் வரைதல், அடிக்கோடிடுதல், மேற்கோள்காட்டுதல் போன்றவற்றுக்கு அதே கருப்பு நிற மை பேனாவை மட்டுமே உபயோகிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் ஒரு விடைத்தாளில் இரண்டு நிற மை பேனாக்களையும்(நீலம் மற்றும் கருப்பு) உபயோகிக்கக் கூடாது. மேலும், விண்ணப்பதாரர் மேற்சொன்ன தேவைகளுக்கு அதே நிறம், அதே வகை கொண்ட பேனாக்களை போதுமான எண்ணிக்கையில் வைத்திருக்க வேண்டும்.

II. Usage of whitener, sketch pens, pencil, colour pencils, multi colour pens, Crayans or any other writing materials, for any purpose.

விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதும்போது whitener, sketch pens, பென்சில், வண்ணப் பென்சில், வண்ண மை பேனா, Crayans போன்றவைகளை உபயோகப்படுத்துதல்.

III. Writing their Register Number in places other than the space specified, in the answer book.

விடைத்தாளில் பதிவெண்ணிற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர வேறு இடங்களில் பதிவெண்ணை எழுதுதல்.

IV. Writing religious symbol, writing their name, signature, phone number,Cell phone number, initials, address and writing any other name, initial or address in the answer book other than the one given in the Question Paper or in the answer book or in the General Instructions.

வினாத்தாள், விடைத்தாள் மற்றும் பொது அறிவுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர், சுருக்கொப்பம் அல்லது முகவரி தவிர மற்ற பெயர், கையொப்பம், சுருக்கொப்பம், தொலைபேசி எண், அலைபேசி எண் (Cell phone no.), முகவரி மற்றும் மதக் குறியீடு ஆகியவற்றை எழுதுதல்.

V. Appealing the Examiner in the answer book invoking sympathy of Examiners in connection with their results.

விண்ணப்பதாரர் தன்னுடைய தேர்ச்சி தொடர்பாக விடைத்தாளில் தேர்வாளரின் பரிவைத்தூண்டும் வகையில் எழுதுதல்.

VI. Applicants writing anything unconnected to the Question, or any impertinent remarks and irrelevant matter revealing his identity.

விண்ணப்பதாரர் கேள்விக்கு தொடர்பில்லாத அல்லது தேர்வுக்கு ஏதாவது சம்பந்தமில்லாத கருத்துக்கள் மற்றும் பொருத்தமில்லாதவற்றை தனது அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுவது.

VII. Possession of electronic devices such as cellular phone etc., watches and ring with inbuilt calculator and other non permitted materials. Any hidden provision / facility like a Bluetooth, communication chip etc., is found in such calculators the answer books will be invalidated. However they may use 'Clarks Table' by Oliver and Boyd and Handbook of Physical Constants and Mathematical Tables by Seshadri, only if such materials are specifically permitted or an instruction to this effect is incorporated in the Question Paper. Applicants are allowed to use battery operated simple calculators for answering papers of essay type and to use the advanced scientific calculators in case of examination in Engineering Subjects.

விண்ணப்பதாரர்கள் அலைபேசி, நினைவூட்டு உள்கட்டமைப்பு குறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரம் மற்றும் மோதிரம் ஆகிய மின்னணு சாதனங்கள் வைத்திருப்பது மற்றும்

அனுமதிக்கப்படாத சாதனங்கள் வைத்திருப்பது. மேலும், மறைத்து வைத்திருக்கக்கூடிய வசதிகள் கொண்ட Bluetooth, communication chip போன்ற பொருட்களில் ஏதேனும் ஒன்று வைத்திருந்தால் கூட அவருடைய விடைப் புத்தகம் செல்லாததாக்கப்படும். இருப்பினும், வினாத்தாளில் அறிவுரைகள் கூறப்பட்டிருந்தால் ஆலிவர் மற்றும் பாயிட் (Oliver and Boyd) எழுதிய கிளார்க்ஸ் டேபிள், சேஷாத்திரியின் நிலையான இயற்பியல் கையேடு மற்றும் கணித அட்டவணை (Hand book of physical constants and Mathematical table) ஆகியவைகளை உபயோகப்படுத்தலாம். மேலும், கட்டுரை வகை தேர்வுகளுக்கு மின்கலத்தால் இயக்கப்படும் சிறிய கணிப்புக் கருவியையும் (Battery operated pocket calculator) மற்றும் பொறியியல் பாடத்தேர்வுக்கு Advance Scientific Calculator கருவியையும் உபயோகப்படுத்தலாம்.

VIII. Applicants should not write the Examination in both the languages (i.e., partly in Tamil and partly in English). If the applicants answer in Tamil they should write the entire examination in Tamil only or if the applicants answer in English they should write the entire examination in English only. However, the Technical words which could not be translated can be written in the respective languages; only the Technical word**s** and not the entire sentence / entire answers. The answer book of the applicant who violates this instruction will be invalidated.

விண்ணப்பதாரர்கள் ஒரு பகுதி ஆங்கிலத்திலும் மற்றொரு பகுதி தமிழிலும் விடை எழுதக் கூடாது. விண்ணப்பதாரர் தமிழில் விடை எழுதினால் அத்தேர்வில் எல்லா விடைகளையும் தமிழில் மட்டுமே எழுத வேண்டும் அல்லது ஆங்கிலத்தில் எழுதினால் எல்லா விடைகளையும் ஆங்கிலத்தில் மட்டுமே எழுத வேண்டும். இருப்பினும் மொழிபெயர்க்க இயலாத தொழில்நுட்ப வார்த்தைகள் (Technical words) அந்தந்த மொழியில் உள்ளவாறே எழுதலாம், மாறாக வாக்கியம் முழுவதும் / விடை முழுவதும் மொழிமாற்றி எழுதக்கூடாது. இவ்வறிவுரையை மீறும் விண்ணப்பதாரரின் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.

**2) <u>Deduction of marks</u>** (<u>மதிப்பெண் குறைத்தல்</u>)

I. Failure to bring the Hall Ticket to the examination hall will lead to reduction of two marks or invalidation of answer sheet as the case may be, as it may deem fit by the Commission on the merit of each such case.

தேர்வுக்கூட அனுமதிச்சீட்டை தேர்வுக்கூடத்திற்கு எடுத்துச் செல்லத் தவறுவது இரண்டு மதிப்பெண் குறைத்தல் அல்லது விடைத்தாளைச் செல்லாததாக்குதல் போன்றவற்றிற்கு வழிகோலும். அவ்வாறான ஒவ்வொரு நேர்விலும் தேர்வாணையம் தகுதியின் அடிப்படையில் எது சரியெனப்படுகிறதோ அவ்வாறு முடிவெடுக்கும்.

II. A reduction of two marks will be made for writing Register Number incorrectly/ Failure to write the Register Number in the space provided for it.

